
ஒரு கண்ணோட்டம்

1926 ~ 2026

நூற்றாண்டு

பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம்

மொழியியல் அறிஞர்



திராவிடப் பல்கலைக்கழகம்

NSR100 கல்வி அறக்கட்டளை

1926 ~ 2026

நூற்றாண்டு

பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம்

பகுப்பும் - தொகுப்பும்

முனைவர் சு இராமலிங்கம்

இணைப்பதிவாளர் ~ மொழிப்புலம்

டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்

திராவிடப் பல்கலைக்கழகம்

NSR100 கல்வி அறக்கட்டளை

1926 ~ 2026
நூற்றாண்டு
பேராசிரியர் வி.ஜ. சுப்பிரமணியம்

மார்ச் 2026

வெளியீடு:
NSR 100 கல்வி அறக்கட்டளை
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN:978-81-984404-9-5

Printed at:
DJ Printers, Chennai – 600 095

அணிந்துரை

முனைவர் மா. சிதம்பரம்
இணைப்பேராசிரியர் (ம) துறைத்தலைவர்
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக் கல்லூரி - காரைக்குடி
அலைபேசி - 9486326526

சால்பூன்றிய தூண்

வரலாற்றிற்குப் பல்வேறு சமயங்களில் சான்றெனக் காட்டச் சில தனித்த ஆளுமைகள் தேவைப்படுகின்றன. அத்தகைய கருத்தியலின் அடிப்படையில் வரலாறு தனது காலப் பெட்டகத்தில் சில பெயர்களைப் பாதுகாத்து வைத்துள்ளது. அத்தகைய பெயர்களுள் ஒன்றே வ.அய். சுப்பிரமணியம். ஏகன், அனேகன் என்று இறைவனைக் குறிக்குமாற் போலத் தனித்தும் பலவாகப் பிறருடன் இணைந்தும் பல்வேறு அரும்பெரும் பணிகளைச் செய்தளித்த பெருமை அனைவருக்கும் உரியதன்று. காலச்சக்கரத்தின் சுழற்சியில் அத்திபூத்தாற் போல் இத்தகைய அருமையுடைய மனிதர்கள் வந்தமைகின்றனர். அவர்களின் அறிவுநுட்பம் சார்ந்தே இந்த அவனி நடைபெறுகின்றது. அத்தகைய ஆளுமையாளர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தவர் வ.அய். சுப்பிரமணியம்.

வ.அய். சுப்பிரமணியம் மொழியியல் துறையிலும் தமிழியல் துறையிலும் அறிவு நுட்பம் செறிந்த ஆய்வு நெறிகளைப் பின்பற்றிய முன்னத்தி ஏர்களுள் முதன்மையானவராக அமைகின்றார். எனவே தான் கீழைத்தேய மாநாடுகளில் தமிழின் தொன்மைக்கும் தொடர்ச்சிக்கும் இடமில்லாமையை உணர்ந்து தமிழுக்கெனத் தனித்த மாநாடு நடத்தப்பெறலின் இன்றியமையாமையை முன்னிறுத்தி உலகத்தமிழ் மாநாடுகள் நடப்பதற்கு முன்மொழிவுகளை மேற்கொண்டவராய்ப் போற்றப்படுகின்றார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோற்றம் பெறுவதற்கு முதற்காரணியாய் அமைந்ததுடன் துணைவேந்தராகவும் இருந்து செயற்கரும் செயலாற்றிய வ. அய். சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டினை அடியொற்றி டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மொழிப்புல இணைப்பதிவாளர் முனைவர் சு. இராமலிங்கம் அவர்களால் தொகுத்தும் பகுத்தும் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் வரலாறாய் வாழ்ந்து நிறைந்த மாமனிதரின் அரும் பெரும் பணிகளை ஆவணப்படுத்துவதில் பெரிதும் பங்களிக்கின்றது.

அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தை வ.அய்.சுப்பிரமணியம் அவர்களை முன்னிறுத்தியே தொடங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருமுறை, துணைவேந்தராகப் பணியாற்றிய காலத்துத் தனது நேரிய கொள்கையில் யாருக்காகவும் எந்தச் சூழலிற்காகவும் சமரசம் செய்து கொள்ளாத கொள்கைச் சான்றோராகவே விளங்கியிருக்கின்றார் வ.அய்.சுப்பிரமணியம். இதற்கான சான்றாதாரத்தினைச் சுந்தரராமசாமியின் கட்டுரை முன்னிறுத்துகின்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின்

துணைவேந்தராக வ.அய்.சுப்பிரமணியம் பணியாற்றிய காலத்து, தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர், அவரைச் சந்திக்கப் பல்கலைக்கு வருகை தருகின்றார். எம்.ஜி.ஆர் வருகின்ற தகவல் வ.அய்.சுப்பிரமணியத்துக்கு முன்னமே தெரிவிக்கப்படுகிறது. வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் பல்கலையின் வாயிலுக்கு வருகை தந்து எம்.ஜி.ஆர் அவர்களை வரவேற்க வேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர்.அதனை அவரிடத்து வெளிப்படுத்தவும் செய்தனர். ஆனால் வ.அய்.சுப்பிரமணியம், துணைவேந்தர் கவர்னரை மட்டுமே அவ்வாறு வரவேற்க வேண்டும், மரபுகளை மீறுதல் முறையன்று என்று மறுத்துவிட்டார். வ.அய் சுப்பிரமணியம் அவர்களின் கொள்கை உறுதிப்பாட்டினை எம்.ஜி.ஆரும் புரிந்துகொண்டார். இவ்விடத்து யாரைப் போற்றுவது. தமிழக முதல்வர் எனினும் மரபினை மீற மறுத்த வ.அய். சுப்பிரமணியத்தையா? அல்லது அதனைப் புரிந்து கொண்டு போற்றிய தமிழக முதல்வர் எம்.ஜி, ஆரையா? வடக்கிருக்க வருவார் என்றவர் பெரியவரா? வந்தவர் பெரியவரா? எனில் இருவரும் பெரியோரே என்னும் சங்கச் சாயலின் வண்ணம் இவ்விடத்து இருவரும் போற்றப்பட வேண்டியவர்களே ஆவர். இத்தகைய நிகழ்வுகள் கல்வியாளர்களும் ஆட்சியாளர்களும் அறிய வேண்டிய ஆளுமைத் தத்துவங்கள் என்பதனை இந்நூல் தெளிவாக விளக்கம் செய்வது போற்றுதற்குரியதாகும்.

இருநூறு ஆண்டு ஆங்கிலேய ஆட்சியில் இந்தியர்கள் ஆட்சியினரால் தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சுரங்கத் தொழில்களில் ஈடுபடுத்த அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுள் தமிழர்களே மிகுதியும் அடங்குவர். அவ்வாறு சென்ற நாடுகளில் தமிழர்கள் பட்ட இன்னல்கள் சொல்லும் தரமன்று. தமிழர்கள் எண்ணற்ற இடர் உற்ற காலத்தும் தங்களது மொழி, பண்பாடு, சமயம் சார்ந்த அடையாளங்களைத் தொலைத்து விடாமல் பாதுகாத்து வந்தனர். எனவே அந்நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் குறித்த செய்திகள் முழுமையாகத் தொகுக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த வ.அய். சுப்பிரமணியம், அதற்காகப் பல்வேறு நாடுகளுக்கும் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் சார்பாகப் பல பேராசிரியர்களை அனுப்பித் தமிழர்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டார் என்பதனை இந்நூல் எடுத்துரைக்கும் இடத்து வ.அய். சுப்பிரமணியத்தின் தமிழ், தமிழர் நலன் சார்ந்த தொலைநோக்குச் சிந்தனை, நம்மை வியப்பில் ஆழ்த்துவது மட்டுமன்றித் தமிழர் நலன் விளைவோர் பயணம் செய்ய வேண்டிய திசையைத் தீர்மானித்து உரைக்கும் கலங்கரை விளக்கமாய் அமைந்திருப்பது ஈண்டு சுட்டுதற்குரியதாகும்.

வ.அய். சுப்பிரமணியம் கல்வி, மொழி சார்ந்த செயல் திட்டங்களில் மட்டும் கவனம் செலுத்தியவரில்லை. அவற்றுடன் சமூக நிகழ்வுகளின்பாலும் தனித்த கவனம் கொண்டவராய் விளங்கினார். தமிழகம் மலைத்தனைய கடற்காவிரி புனல் பரந்து பொன்கொழிக்கும் பெற்றியைத் தன்னகத்துக் கொண்டமைந்ததாகும். எனினும் காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சினை காலம்தோறும் தொடர்ந்து வருகின்ற ஒன்றாய்த் தமிழகத்திற்கு அமைந்து போனது வரலாற்றுப் பிழை எனில் மிகையன்று. இத்தகைய சிக்கல்கள் எழும்போதெல்லாம் தமிழர்கள் தங்கள் தரப்புச் சான்றாதாரங்களை முன்னிறுத்தி வாதாடுவது என்பது வரலாற்றின் பக்கங்களில் தொடர்ந்து காணப்படுகின்றது. இதற்கு வ.அய். சுப்பிரமணியத்தின் காலமும் விதிவிலக்கன்று. அவ்வாறே காவிரிப்பிரச்சினை முற்றிய காலத்து, தமிழக அரசு தனக்கான உரிமைகளை மீட்டெடுப்பதற்கான ஆதாரங்களை ஆவணப்படுத்தி உரைக்கும் வகையில் சங்க இலக்கியத்திலும், நவீன கால இலக்கியத்திலும், கல்வெட்டுகளிலும் காணலாகும் காவிரி குறித்தான

செய்திகளைத் தொகுத்துத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக நூல் ஒன்றினை வெளியிட்ட இவரின் செம்மாந்த செயல் தமிழ்கூறும் நல்லுலகம் காலம்தோறும் கவனத்தில் கொள்ளவேண்டியதாகும் என்பதனை இந்நூல் எடுத்துரைக்கும் பாங்கு பாராட்டிற்குரியதாகும்.

தமிழ்நிலத்திலும் அயல் நிலத்திலும் காணப்பட்ட தமிழ் ஓலைச் சுவடிகள், தமிழர்கள் தொடர்பான கல்வெட்டுகள், பட்டயங்கள் முதலியவற்றைச் சேகரிக்க வ.அய். சுப்பிரமணியம் மேற்கொண்ட அரிய முயற்சியை எடுத்துரைக்கும் இந்நூல், அதன்மூலம் லண்டனில் அமைந்துள்ள இந்திய அலுவலக நூலகத்தில் காணப்படும் ஆவணங்களை மைக்ரோ பிலிமில் பதிவு செய்து தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட செயலினையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்தியாவில் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலும் இத்தகைய ஆவணங்கள் இல்லை என்பதே இச்செயலின் அரும்பெரும் பயனை விளக்கி நிற்கும்.

பூம்புகார் தமிழர்களின் பழமை வாய்ந்த பெருநகரம் ஆகும். பூம்புகாரின் கட்டடக்கலை அமைப்பு ஏனைய பண்டைய நகரங்களின் அமைப்பில் இருந்து வேறுபட்டதாகும்.சங்க நூல்களும் குறிப்பாகப் பட்டினப்பாலையும் சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டமும் பூம்புகாரின் சிறப்புகளைத் தெற்றென விளக்கம் செய்யும். பதியெழு அறியாப் பழங்குடிகள் வாழும் பதியாய், மொழிபெயர் தேயத்துப் புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும் முட்டாச் சிறப்பின் பட்டினமாய் விளங்கிய புகார் நகரம் கடல்கோளால் அழிந்த போதும் பண்பட்ட தமிழ்ச் சமூகத்தின் அடையாளங்களைத் தன்னுள் புதைத்து வைத்திருந்தது. இதனை நன்கு உணர்ந்த வ.அய். சுப்பிரமணியம் கடலில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கான அகழ்வாய்வு நிறுவனத்தை இராமேசுவரத்திற்கு அருகில் உள்ள மண்டபத்தில் நிறுவினார். இதன் மூலம் மறைந்த பூம்புகார் குறித்த பல்வேறு உண்மைகள் வெளியுலகம் அறிய வந்தன என்பது ஈண்டு குறித்தற்குரியதாம்.

திருவனந்தபுரத்தில் திராவிட மொழியியல் பள்ளி, இந்திய நாட்டுப்புறவியல் நிறுவனம் போன்றவற்றைத் தோற்றுவித்தது இவர்தம் செயற்செம்மையில் சிறந்ததாம். ஒரு மொழிக் குடும்பத்திற்காக இந்தியாவில் செயல்படும் ஒரே பல்கலைக்கழகமான குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம் உருவாகக் காரணமாக இருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக 1997-ஆம் ஆண்டு பணியேற்ற காலத்து, திராவிட மொழிகளில் அகராதி ஒன்றினைத் தொகுக்கும் திட்டத்தை முன்னெடுத்து அறிஞர்களைக் கொண்டு நிறைவேற்றியும் காட்டிய இவர்தம் செயல்திறத்தினை இந்நூல் எடுத்தியம்பி நிற்கின்றது.

தஞ்சையில் அமைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகமாக உயர்ந்திட வேண்டும் என்பது வ.அய். சுப்பிரமணியத்தின் வாழ்நாள் அவாவாக அமைந்திருந்தது. இதற்குத் தக்க சான்றாய், தமது முதல் ஐந்தாண்டு காலப் பணியிலிருந்து விடைபெற்றபோது, தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் வ.அய்.சுப்பிரமணியம் எழுதிய வாழ்த்துக் கடிதம் அமைகின்றது. இதில், வ. அய். சுப்பிரமணியம், "இன்று (31.07.1986) மாலை ஐந்து மணியுடன் பொறுப்பை ஒப்புவித்து நான் திருவனந்தபுரம் செல்கிறேன்... பரதன் பாதுகாத்த பாதுகையைப் போல் பிறர் கையில் மகிழ்ச்சியுடன் விட்டுச்செல்லும் உணர்வு ஏற்படுகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகம் பிற பல்கலைக்கழகங்கள் போன்ற ஒன்றன்று. இது உயராய்வு மையம். இங்கே அறிவு சான்ற சிலரே இடம்பெற முடியும். இடம்பெற்றவர்களும் தமது

அறிவாற்றலை வெளிப்படுத்தத் தொடர்ந்து தம்மைத் தாமே தேர்வுக்குட்படுத்திக்கொள்ள வேண்டும்; என்று ஆய்வின் தரம் குறைகிறதோ அன்று தமிழ்ப்பல்கலைக்கழகம் தளர்ந்துவிடும். நல்கைகள் குறையும். இந்த நிறுவனம் நிலைகுலைந்துவிடும். இதனை ஒவ்வொருவரும் நினைவிற் கொள்வது நன்று" எனக் குறித்திருப்பது அவர்தம் உள்ள வேட்கையினை எடுத்துரைக்கும் பலகணியாய் அமைந்திருக்கின்றது.

வ.அய். சுப்பிரமணியம், எந்தப் பதவியையும் எதிர்பார்த்துப் பணி செய்தவர் அல்லர். பதவிகள் வந்தவிடத்துப் பயந்து நீங்கியவரும் அல்லர். அதேநேரம் கிடைத்த பதவியை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அறம் தவறிய வழியில் செயல்பட்டவரும் அல்லர். விரும்பி அழைக்கப்பட்டால் மட்டுமே பதவிகளை ஏற்கும் பண்புகளைக் கொண்டிருந்த வ.அய். சுப்பிரமணியம், பதவி நாற்காலியில் அமராமலும் மக்கள் பணி செய்ய முடியும் என்கிற உள்ளத் தெளிவை உணர்ந்து வாழ்ந்தவர்.


வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள், மரபான தமிழறிஞராக இருந்தாலும் அவர் அமெரிக்கப் பல்கலையில் பயின்றவர். ஆகவே முறைமை மீது அழுத்தமான பற்றுக் கொண்டவர். தமிழாய்வை அறிவியல் விதிகளின்படி மட்டுமே நடத்தவேண்டும் என்பதில் மிகுந்த பிடிவாதத்துடன் இருந்தார். தமிழாய்வு என்றால் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்துதல் என்ற சமவாக்கியம் இருந்த சூழலில் இந்த அறிவியல் அணுகுமுறையே அவர் தமிழுக்கு அளித்த பெருங்கொடை என ஜெயமோகன் குறிப்பது வ.அய் சுப்பிரமணியத்தின் செம்மாந்த செயல்களுக்கு உரிய கட்டளைக்கல் எனலாம்.

கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் மன நிறைவு தரும் வாழ்க்கை எல்லோருக்கும் எளிதில் வந்தமைவதன்று. உள்ளத்துள் தெளிவும் சொல்லில் கனிவும் செயலில் செம்மையும் கொண்ட சிலருக்கு மட்டுமே வந்தமைகின்றது. அத்தகையோரின் வாழ்வியல் சிந்தனைகளை ஏற்று விரைந்து தொழில் கொள்கின்றது ஞாலம். அவ்வகையில் வ.அய். சுப்பிரமணியத்தின் வாழ்க்கை இளைய தலைமுறை பின்பற்ற வேண்டிய பாதை என்பதனை இந்நூல், பக்கங்கள் தோறும் பதிவு செய்திருப்பது பாராட்டத்தக்கதாகும். உயர்ந்தோரைக் குறித்தமையாலே இந்நூலும் உயர்வுடையதாயிற்று. கற்றாரைக் காமுறும் கல்வியுயர் மக்கள் கற்கலாம். கற்றாரைக் காமுறும் இயல்பிலா மக்களும் கற்பதன் வழி, காமுறும் வித்தையைக் கண்டு பயன் பெறலாம்.

(😊)(😊) @@@@@@ (😊)(😊)

பொருளடக்கம்

குறிப்பு: பல்வேறு இணையதளங்கள் மூலமாக ஆராய்ந்து எடுக்கப்பெற்ற தரவுகளை ஆதாரமாகக்கொண்டு தொகுக்கப்பெற்றது.



ஒரு கண்ணோட்டம்

மொழியியல் அறிஞர்















NSR100 கல்வி அறக்கட்டளை

மொழியியல் அறிஞர் பேராசிரியர்

வ.அய்.சுப்பிரமணியம்

முனைவர் இராம.சுந்தரம்





திராவிட மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை மையப்படுத்திய திராவிடவியல் ஆய்வைத் மது உயிர் மூச்சாகக் கொண்டு தம் வாணாள் முழுதும் பாடுபட்டவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் மூதறிஞர் வ.அய்.சுப்பிரமணியனார். துணைவேந்தராகும் முன்பே, தமிழியல், மொழியியல் ஆய்வுகளில் ஈடுபட்டு, பல அறிஞர்களை உருவாக்கியவர்.

அவரது திட்டமிடும் பாங்கும், செயல் திறனும் அவரது தலைமையில் செயல்பட்ட சில நிறுவனங்கள் நன்கு வளர்ச்சியுற்றுப் பெருமையுறக் காரணமாயின. தமிழ்ப் பல்கலைக்கழகமும் அவற்றுள் ஒன்றாகும். 1981 முதல் 1986 வரையுள்ள

ஐந்தாண்டு காலம் அவர் யார்க்கும் அஞ்சாது, குறிக்கோளை விட்டுத்தராது, துணிவோடும், நேர்மையோடும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக செயல்பட்டார். பன்னாட்டுத் தமிழறிஞர்கள், மாணவர்களை மட்டுமின்றி, பிறமொழியினரையும் பல்கலைக்கழகம் தன்பால் ஈர்க்க அவரது செயல்முறை உதவியது. போலந்து, ஜெர்மனி, மலேசியா, சீனா, மொரீசியஸ் எனப் பல நாடுகளைச் சார்ந்தவர்களும், இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து தமிழ் கற்கவும், ஆய்வு மேற்கொள்ளவும் முனைந்தனர். இவ்வாறு தமிழ்ப் பல்கலைக்கழககத்துக்கு ஒரு உலகளாவிய பெருமையை பெற்றுத் தந்த அந்தப் பெருமகன் நம்மை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி 29.06.2009 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பிறமொழி அறிவும் தேவை என்பதைக் கருத்தில் கொண்ட அவர் பிராகிருதம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, மலாய் ஆகிய மொழிகளைக் கற்க மாணவர்களை உரிய இடங்களுக்குச் சென்று பயிற்சி பெறச் செயதார். அவர்களுள் சிலர் இன்று நல்ல மொழி பெயர்ப்பாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் பிற நாட்டிலிருந்தும் வந்து தமிழ் கற்றவர்கள் தமிழ் இலக்கியங்களை அவர்தம் மொழிகளில் மொழிபெயர்த்ததோடு, இருமொழி அகராதிகளையும் உருவாக்கினர். பல ஆண்டுகளாகச் செயலற்றுக் கிடந்த தமிழ்ப் பேரகராதி, கலைக் களஞ்சியப் பணிகள், இவரது முயற்சியால் முழுவீச்சில் செயல்படத் தொடங்கின. தகுதியானவர்களை அமர்த்தி இத்திட்டங்களைச் செயல்படுத்திய காரணத்தால் இன்று பல்கலைக்கழகம் மூலம் பெருஞ்சொல்லகராதிகள் (5 தொகுதிகள்) 2, கலைக்களஞ்சிங்கள் (30 தொகுதிகள்), சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்(3), பல துறைசார் கலைச் சொல்லகராதிகள்(12) வெளிவந்து பலருக்கும் பயன்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஆய்வாளர்களின் தரமான படைப்புகளும் வெளிவந்து, தமிழியல் ஆய்வின் பரப்பை விரிவுபடுத்தியுள்ளன. பிறமொழி

யாளர்களும் தமிழின் சிறப்பை உணரும் வகையில் தமிழிலக்கியங்களும் மொழியாக்கம் செய்யப்பட்டு 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் நிலை' ஏற்பட்டுள்ளது. கிடைத்தற்கரிய பல அரிய தமிழ் நூல்களைப் பதிப்பிக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தினார். அயல்நாடுகளில் வாழ் தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் பண்பாட்டுத் தொடர் வகுப்புகளைத் தொடங்கி வைத்தார்.

பல்துறை அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழிவழிக் கல்வியே முதன்மையானது என்பதை ஏற்று, பொறியியல், மருத்துவம், இரண்டையும் தமிழ் வழிக் கற்பிக்கும் திட்டத்தில், அதற்கான பாடநூல்களை உருவாக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் (9 மாதம் முதல் ஓராண்டு வரை) 27 நூல்கள் (பொறியியல் 13, மருத்துவம் 14) பெறப்பட்டு, அவை தொடர்ச்சியாக வெளிவரத் தொடங்கின. பொறியியலைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலேயே பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து கற்பிப்பிப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. அதேபோல், தஞ்சை மருத்துவக்கல்லூரியுடன் சேர்ந்து மருத்துவப் படிப்பைத் தமிழ் வழிச் செயல்படுத்தும் திட்டமும் இருந்தது. பல்வேறு காரணங்களால் இவை இரண்டும் செயல்படுவதில் தயக்கம் ஏற்பட்டது. இத்திட்டத்தின் மூலம், தமிழில் இத்துறைகளுக்கான நூல்களை ஆங்கில நூல்களின் தரத்துக்கிணையாகத் தமிழில் எழுதித்தரும் வல்லுநர்கள் உள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டது. 'தமிழில் எதையும் சொல்ல முடியும்' என்ற இவரது கருத்து. இதன் மூலம் வலுப்பெற்றது. தமிழியல் ஆய்வு பரவலாக்கப்படும் நோக்கிலும், தக்கவர்களை இனங்காணும் விருப்பிலும் இவர் பல கருத்தரங்குகள் நடத்தினார். எந்தத் துணைவேந்தரும் மேற்கொள்ளாத ஒரு நடைமுறையை இவர் மேற்கொண்டார். கருத்தரங்கின் தொடக்கம் முதல் இறுதிவரை, பேராளர்களோ ஒரு பேராளராக அமர்ந்து, கருத்தரங்கில் கவனம் செலுத்தி, 'இதனை இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்' என்பதற்கேற்ப, தகுதியானவர்களைத்

தெரிவு செய்து, அவர்களைப் பணியமர்த்தி, ஆய்வை மேற்கொள்ளச் செய்வதுதான் அந்த நடைமுறை. கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் திட்டத்தையும் செயல்படுத்தினார்.

நாட்டுப்புறக் கலைகளைப் பேணிக்காக்கும் திட்டத்தின் அடிப்படையில் கரகாட்டம், தப்பாட்டம் முதலியவற்றை நாடகத்துறை வழி வளர்த்தெடுக்கும் பணியும் நடைபெற்றது. இன்று தப்பாட்டம் திரையுலகிலும், மேலை நாடுகளிலும் அரங்கேற்றப்படக் காண்கிறோம். இதற்கு அடித்தளமிட்ட பெருமகன் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர்தான்.

திராவிடவியல் பணிகள்


மூதறிஞர் வ.அய்.சுப்பிரமணியனாருக்குத் தமிழ் மீது எவ்வளவு காதல் உண்டோ அதற்குச் சற்றும் குறையாத அளவு பிற திராவிட மொழிகளிடத்தும் உண்டு. அவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குத் துணை வேந்தராக வரும்முன் கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறைத்தலைவராக இருந்தார். திராவிட மொழியியல் ஆய்வை வளர்த்தெடுத்தார். இலக்கிய இலக்கண ஆய்வோடு அமையாது, கிளைமொழி ஆய்விலும் கருத்தூன்றி, பல ஆயுவேடுகள் வெளிவரத் துணை நின்றார். இதன் விளைவாக 1971இல் திராவிட மொழியியல் கழகம் (Dravidian Languistics Association) தோன்றியது. இக்கழகத்தின் சார்பாக, ஆண்டுதோறும் இந்தியாவின் பல மாநிலங்களிலும், கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. 2009 ஜூன் மாதம் திருவனந்தபுரத்தில் நடந்த கருத்தரங்கு 37வது கருத்தரங்காகும். எவ்வித இடையூறுமின்றி, ஆண்டுதோறும் தொடர்ந்து கருத்தரங்குகளை நடத்தும் ஒரு சில அமைப்புகளில் திராவிட மொழியியல் கழகமும் ஒன்று என்பதும், அதற்கான உந்து சக்தியாக இருந்தவர் பேராசிரியர் என்பதும் உறுதி. திராவிட மொழியியல் ஆய்வை உலக அளவில் கொண்டு செல்லும் நோக்கில் 1972இல் பன்னாட்டுத் திராவிட மொழியியல் இதழ் (International Journal of Dravidian Linguistics) ஒன்று இவரால்

தொடங்கப்பெற்றது. ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் இவ்விதழ் இன்றுவரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

திராவிட மொழியியல் கழகம் தொடக்கம் முதல் இன்று வரை நூல் வெளியிடும் பணியிலும் ஈடுபட்டு நூற்றுக்கும் மேலான நூல்களை வெளியிட்டுள்ளது. திராவிடக் களஞ்சியம் -3 தொகுதிகள் (Dravidian Encylopaedia –3 Vol), திராவிடப் பழங்குடி மக்கள் களஞ்சியம் - 3 தொகுதிகள் (Encyclopaedia of Dravidian Tribes – 3 Vols), மேற்கு வங்காளம் - ஒரு கையோடு – 2 தொகுதிகள் (A handbook of West Bengal 2 Vols), தொல்காப்பிய மூலபாட வேறுபாடுகள் (Textual vanation of Tolkappiyam), தொல்காப்பியச் சொல்லடைவு (Index of Tolkappiyam), தென்னிந்தியாவில் சமணம் (Jainism of South India), தெலுங்கு இலக்கணக் கோட்பாடுகள் (Theories of Telugu Grammer), கிரந்த எழுத்துக்கள் (The Grantha Script) என்பன அக்கழக வெளியீடுகளில் சிலவாகும். சமஸ்கிருதம், பிராமி மொழிகளிலுள்ள இலக்கணங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது போல, திராவிட மொழிகள் சிலவற்றின் இலக்கணமும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களைத் தோற்றுவிக்கும்முன் இவர் கேரள பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பேரா. வையாபுரிப்பிள்ளையின் கீழ் ஆய்வுப் பணியையும், அடுத்து ஆசிரியப் பணியையும் தொடங்கினார். துறைத் தலைமைப் பொறுப்பு ஏற்றதும், வையாப்புரிப்பிள்ளையின் திட்டமான சங்க இலக்கியச் சொல்லடைவு, சங்க இலக்கிய ஆய்வு ஆகியவற்றில் கருத்தூன்றி, தக்க மாணவர்களைக் கொண்டு அத்திட்டத்தைச் செயல்படுத்தலானார். புறநானூறு சொல்லடைவு இவரது ஆக்கம் ஆகும். தொடர்ந்து இவரது மாணவர்கள் எட்டுத் தொகை, பத்துப்பாட்டுக்கான சொல்லடைவுகளைத் தயாரித்து, அவற்றை ஆதாரமாகக் கொண்டு, இந்த இலக்கியங்களின் மொழிக் கட்டமைப்பை ஆய்ந்து முனைவர் பட்டம் பெற்றனர். அவற்றுள் சில ஏற்கனவே கேரளப் பல்கலைக்கழகம் மூலம் வெளிவந்துள்ளன. தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்த சிலர், மொழியியலில் முனைவர்பட்டம் (இந்தியானா பல்கலைக்கழகம், அமெரிக்கா)

பெற்றிருந்ததால் இரண்டையும் இணைத்து ஆய்வுத் தளத்தை விரிவுபடுத்தினார். இதன் பலனாக, புளும்ஃபீல்டின் அமைப்பியல் மொழிக் கோட்பாடுகளோடு சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடு, பைக்கின் டாக்மிமிக் கோட்பாடு, ஹெம்சிலேவின் கிளாஸமாட்டிக் கோட்பாடு என அன்று புதிதாகக் களமிறங்கிய பல மொழியியல் கோட்பாடுகளைத் தமிழுக்கும் பொருத்திப் பார்த்து அதன் வன்மை மென்மைகளைக் காணச் செய்தார். 1960களில் இவ்வகை ஆய்வு வேறு பல்கலைக்கழகங்களில் விரிவான அளவில் இடம் பெறவில்லை. மொழியியலில் ஆழக்கால் பதித்தவர் என்பதற்கு இப்பன்முறை ஆய்வு ஒரு சான்றாகும்.

பிற பணிகள்



இவரது கல்வி சார் நிறுவனப் பணியின் அடுத்தக் கட்டம் இறுதிக்கட்டம் ஆந்திராவிலுள்ள குப்பத்தில் தோற்றுவிக்கப்பட்ட திராவிடப் பல்கலைக்கழகமாம். அதன் இணை வேந்தராக அதன் தோற்றம் முதல் சில ஆண்டுகள்(1997-2001) பணியாற்றினார். திராவிடம் என்ற சொல்லுக்கேற்ப தமிழகம், ஆந்திரம், கருநாடகம் சார் பகுதியிலுள்ள குப்பத்தைத் தேர்ந்தெடுத்தார். பல்வேறு கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. நல்ல நூலகம் ஒன்று அமைக்கப்பெற்றது. பல்கலைக்கழகத்துக்கான பொலிவுடன் பல கட்டடங்களையும் உருவாக்கினார். இன்றும் அப்பல்கலைக்கழகம் செவ்வனே செயல்பட்டு வருவதற்குக் காரணம் இவரது திட்டவரைவு தான்.

இவ்வாறு பன்முக நோக்கில் யாவரும் போற்றும் வண்ணம் செயல்பட்ட இவரது வாழ்வியல் முறை பற்றிய சில குறிப்புகள்:



நாகர்கோவிலுள்ள வடசேரியில் 18.02.1926 இல் அய்யம்பெருமாள் - சிவகாமி இவர்களுக்கு மூத்த மகனாகப் பிறந்தார். 83 ஆண்டுகள் வாழ்ந்து தாம் மேற்கொண்ட பணிகளைக் குறைவேதுமின்றிச் செயலாற்றிய மனநிறைவோடு தமது 84வது வயதில் 29.06.2009 அன்று நீள்துயிலில் ஆழ்ந்தார். அவர் துயின்றார். ஆனால், அவரது வழிகாட்டுதலில் இன்று வரை பணியாற்றி வரும் பலரும் துயிலின்றித் தவிக்கின்றனர். வடசேரி அய்யம்பெருமாள் சுப்பிரமணியம் என்பது தமிழில் வ.அய்.சு. என்றும், ஆங்கிலத்தில் VIS என்றும் சுருக்கமாகக் கூறப்படும். அவர் மாணவர் ஒருவர் (Very Important Subramoniam) என்று மிகப்பொருத்தமாக அழைத்து, ஒரு கட்டுரையும் எழுதியுள்ளார். இவரது குடும்பம் பெரியது பொருளாதார நெருக்கடிக்குட்பட்டது. இதைப் புரிந்து கொண்டதால், அதற்கேற்பத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். மனைவி பெயர் இரத்தினம். மக்கள் நால்வர். மூத்தவர்கள் இருவரும் இவரை முந்திக் கொண்டனர். இளைய மகனும், மகளும் உள்ளனர். வடசேரியிலுள்ள எஸ்.எம். ஆர்.வி. பள்ளியிலும் (1941), நாகர்கோவில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரியிலும் (1943) படித்த பின், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் (1946) பட்டம் பெற்றார். அமெரிக்காவிலுள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் மொழியியலறிஞர் ஹவுஸ் ஹோல்டர் (House Holder) நெறிப்படுத்துகையில் மொழியியலில் முனைவர் பட்டம் (1957) பெற்றார். இந்த இடைப்பட்ட காலத்தே (1946-57) திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும், புது தில்லியில் அகில இந்திய வானொலி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராகவும், கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.



1958-67 முதல் அப்பல்கலைக்கழகத்தில் தமிழ், மொழியியல் துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றி, பின்னர் 1967 முதல் மொழியியல் துறைத்தலைவராகவும், பேராசிரி யராகவும் பணி தொடர்ந்தார். 1981-86 காலகட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தரானார். 1997-2001 குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர், இடைப்பட்ட காலங்களில் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளியின் மதிப்புறு இயக்குநராக இருந்து தொண்டாற்றினார். 2001-2009 வரை இந்த இயக்குநர் பணி தொடர்ந்து நடைபெற்றது. பேராசிரியர் பொருளா தார நெருக்கடிக்காளான குடும்பத்தில் பிறந்தவர். சிலகாலம் திருவனந்தபுரத்தில் மாமனார் வீட்டில் வசித்தவர். அங்கும் சில பொருளாதாரச் சிக்கல் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. இது இவரது வாழ்வில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. அதனால் பொருளாதார வசதி இல்லாத மாணவர்களுக்கு தக்க உதவி செய்து அவர்கள் கல்விப் பணி தொடர வழி வகுத்தார். மாணவர்கள் என்றில்லாது மற்றவர்களுக்கும் அவரது கொடைக்கரம் நீண்டது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்தகாலத்தில், சில பதிப்பகத்தார் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான போது, உரிய விலை கொடுத்து அவர்களது நூல்களை நூலகத்துக்கு வாங்கினார். இது பின்னரும் தொடர்ந்தது.

இவர் அடக்கமானவர் இறுக்கமானவர் யாரோடும் நெருங்கி உறவாடாதவர் துணிச்சலும் நேர்மையும் கொண்டவர் தமக்குச் சரியென்று பட்டதை எப்பொழுதும் எவருக்காகவும் விட்டுக் கொடுக்காதவர் என இவரது பண்பு நலன் குறித்துப் பரவலாகப் பேசப்படுவது உண்டு. விட்டுக் கொடுத்தல், நெருங்கிப் பழகுதல் முதலியவை தமது குறிக்கோளை நிறைவேற்றத் தடையாகிவிடுமோ என்கிற எண்ணத்தால் அவற்றைத் தவிர்த்தார். வெளித்தோற்றத்துக்குக் கெடுபிடி யாளராகத் தோன்றினாலும், உரிய சமயங்களில் தமது மனநெகிழ்வை உணர்வு வூர்வமாக வெளிப்படுத்தத் தயங்கமாட்டார்.

பல துறைசார் ஆய்வுகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் 150க்குக் குறையாத கட்டுரைகள். சில மதிப்புரைகளும் எழுதியுள்ளார். 215

நூல்கள் வெளியிட்டுள்ளார். *Index of Puranaanuuru, Survey of Malayalam Dialects* முதலியன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. இவரது ஆய்வின் மையம் திராவிடவியலாகும். இவரது மறைவுக்குப் பின் இவரைப் பற்றி எழுதிய ஒரு மலையாள அறிஞர் "இவரது உடலும் உயிரும் திராவிடவியலே" என்று குறிப்பிட்டார்.

(😊)(😊)@@@@@@@(😊)(😊)

{https://ta.wikipedia.org/wiki/%E0%AE%B5._%E0%AE%90._%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D}

தமிழ்ப்பணி

புதுச்சேரியில் மொழியியல் நிறுவனம் உருவாகவும் தமிழ்ப்பல்கலைக்கழகம் செழித்து வளரவும் காரணமானவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருமுறை துணைவேந்தராகப் பணியாற்றியவர்.

ஆந்திராவில் உள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் மூலகர்த்தாவாக விளங்கியதுடன் அதன் முதல் இணைவேந்தராகவும் விளங்கியவர். **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்** தோற்றம் பெறவும் காரணமானவர். உலகத்தமிழ் மாநாடுகளைத் தனிநாயகம் அடிகளார் நடத்த உறுதுணையாக இருந்தவர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்


https://ulakaththamizh.in/home


தமிழ்க் கல்வியில் உயராய்வினை வளப்படுத்துதல், தமிழாய்வாளருக்குத் தேவையான ஆவணங்களை உருவாக்குதல், தமிழ், தமிழர், இலக்கியம், வரலாறு, மருத்துவம், கல்வி, கலை, சமுதாயம், பண்பாடு, அறிவியல், எனத் துறைதோறும் தமிழாய்வை மேம்படுத்துதல், தமிழின் பெருமையை அயலவருக்குச் சிறப்பாக எடுத்துரைத்தல், உலகத் தமிழறிஞரிடையே தொடர்பு கொண்டு தமிழறிஞர்களும், நிறுவனமும் பயன்கொளும் நிலையில் தமிழாய்வினை வளர்த்தல் என்பன உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அடிப்படை இலக்காக, தலையாய நோக்கமாக அமைகின்றன.


தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிற இந்திய மொழியினருக்கும் பிற நாட்டினருக்கும் கற்பித்தல் என்பது பிறிதொரு நோக்கமாகும். இவற்றின் அடிப்படையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பல்வேறு திட்டங்களின் வழிச் செயலாற்றி வருகிறது.

மொழியியல் ஆய்வு

"புறநானூற்றுச் சொல்லடைவுகள்" என்ற இவர் ஆய்வுநூல் குறிப்பிடத்தக்கது. பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியவர். **அண்மையில் இவரது "வ.ஐ.சுப்பிரமணியன் கட்டுரைகள்" 2 தொகுதிகளாக வந்துள்ளன. முறையே மொழியும் பண்பாடும், இலக்கணமும் ஆளுமைகளும் என்ற தலைப்பில் அவை வெளிவந்துள்ளன.** இவர் பொதுப் பதிப்பாசிரியராக இருந்து பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. திராவிடமொழியியல் பள்ளியின் நிறுவனராக இருந்து அதன்வழி பல ஆய்வு மாநாடுகள் நடத்தியவர். ஆங்கிலத்தில் இதழ் வெளியிட்டவர்.







இவர் மேற்பார்வையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட முனைவர் பட்ட ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. மொழியியல் துறையில் இவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தமிழ் பல்கலைக்கழகம் ஆகியன முனைவர் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தன.

தமிழ்நாடு அரசின் சிறந்த நூலாசிரியர் விருது

*இவர் எழுதிய "வ. ஐ. சுப்பிரமணியம் கட்டுரைகள் தொகுதி ஒன்று - **மொழியும் பண்பாடும் இரண்டு - இலக்கணமும் ஆளுமைகளும்** (இரண்டு தொகுதிகள்)"* எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2007

ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களில் மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

பரவலர் பண்பாட்டில்

சுப்ரமணியத்தைக் நாயகனாகக் கொண்டு ***காகித மனிதர்கள்***(1995) எனும் புதினத்தை எழுத்தாளர் பிரபஞ்சன் இயற்றியுள்ளார்.



https://www.goodreads.com/book/show/23379950-kagitha-manithargal

https://www.muthukamalam.com/essay/general/p185.html

மறைவு

சுப்பிரமணியம் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவம் பயனளிக்காமல் 29 சூன் 2009 அன்று இ.சீ.நே. 8:00மணிக்கு கேரள மாநிலத்தலைநகர் திருவனந்தபுரத்தில் உயிரிழந்தார்.

https://muelangovan.blogspot.com/2009/06/blog-post_29.html

தமிழ்ப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர்

வ.ஐ.சுப்பிரமணியன்

அவர்கள் இயற்கை எய்தினார்!



அறிஞர் வ.ஐ.சுப்பிரமணியன்



பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில்
வலப்பக்கமாக அறிஞர் வ.ஐ.சு.

உலக அளவில் புகழ்பெற்ற மொழியியல் அறிஞரும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தருமான முனைவர் வ.ஐ.சுப்பிரமணியன அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மருத்துவம் பயனளிக்காமல் இன்று காலை (29.06.2009) எட்டுமணிக்குத் திருவனந்தபுரத்தில் அவர் உயிர் பிரிந்தது.இன்று மாலை 4 மணிக்குத் திருவனந்தபுரத்தில் உள்ள அனைத்துலகத் திராவிடமொழியியல் பள்ளி வளாகத்தில் அவர் உடல் எரியூட்டப்பட உள்ளது. தமிழகத்து அறிஞர்களும் பிற மாநிலத்து அறிஞர்களும் திருவனந்தபுரத்தில் கூடி இறுதி வணக்கம் செலுத்த

உள்ளனர். செம்மொழி நிறுவனத்தின் பொறுப்பு இயக்குநர் முனைவர் க.இராமசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் ஆகியோர் இறுதி வணக்க நிகழ்வில் கலந்துகொள்ள சென்றுள்ளனர்.

18.02.1926 இல் நாகர்கோயில் அருகில் உள்ள வடசேரியில் பிறந்தவர் வ.ஐ.சுப்பிரமணியன் அவர்கள் ஆவார். வடசேரியில் தொடக்கக்கல்வி பயின்ற வ.ஐ.சுப்பிரமணியன் அவர்கள் நெல்லை இந்துக் கல்லூரியில் பயின்றவர். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்தவர். அமெரிக்காவில் உள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். இவர் சில காலம் புதுதில்லி அனைத்து இந்திய வானொலியிலும் பணியாற்றியுள்ளார். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் அன்புக்குரிய மாணவர். வையாபுரியார் கலாத்துக்குப் பிறகு கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை வளர்ச்சியிலும் மொழியியல் துறை வளர்ச்சியிலும் மிகப்பெரிய பங்களிப்பு செய்தவர்.


புதுச்சேரியில் மொழியியல் நிறுவனம் உருவாகவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் செழித்து வளரவும் காரணமானவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருமுறை துணைவேந்தராகப் பணியாற்றியவர்.ஆந்திராவில் உள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் மூலகர்த்தாவாக விளங்கியதுடன் அப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக விளங்கியவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றம் பெறவும் காரணமானவர். உலகத்தமிழ் மாநாடுகளைத் தனிநாயகம் அடிகளார் நடத்த பக்க பலமாக இருந்தவர்.

புறநானூற்றுச் சொல்லடைவுகள் என்ற இவர் ஆய்வுநூல் குறிப்பிடத்தக்கது. பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியவர். அண்மையில் வ.ஐ.சுப்பிரமணியன் கட்டுரைகள் 2 தொகுதிகளாக வந்துள்ளன.முறையே **மொழியும் பண்பாடும், இலக்கணமும் ஆளுமைகளும்** என்ற தலைப்பில் அவை வெளிவந்துள்ளன. இவர் பொதுப் பதிப்பாசிரியராக இருந்து பல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

திராவிட மொழியியல் பள்ளியின் நிறுவனராக இருந்து அதன்வழி பல ஆய்வு மாநாடுகள் நடத்தியவர்.ஆங்கிலத்தில் இதழ் வெளியிட்டவர்.


தமிழ், மலையாளம், இந்தி, கன்னடம், தெலுங்கு மொழிகளில் முனைவர் பட்டம் செய்த ஆய்வு மாணவர்களுக்கு நெறியாளராக இருந்து நெறிப்படுத்திய பெருமைக்குரியவர். இவர் மேற்பார்வையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட முனைவர் பட்ட ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இவர் மாணவர்கள் உலகம் முழுவதும் உயர்பொறுப்புகளில் உள்ளனர் கண்டிப்பானவர். நேரத்தைப் பின்பற்றுவதில் இணைசொல்லமுடியாதவர். திட்டமிட்டுச் செயல்படுவதில் வல்லவர். உழைக்கக் கூடியவர்களை ஊக்கப்படுத்தக் கூடியவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழியாக வெளிவந்துள்ள நூல்கள் யாவும் இவரின் அறிவாற்றலுக்கும் திட்டமிடலுக்கும் சான்றாகும்.

மிகச்சிறந்த மொழியியல் அறிஞரை இழந்து தமிழுலகம் வாடுகிறது. உலகத் தமிழர்கள் ஆழ்ந்த துயரில் உள்ளனர்.



His walking in the Kariavattom Campus,
University of Kerala, Thiruvanandhapuram, Kerala.

(ஓ)(ஓ) ஓஓஓ (ஓ)(ஓ)



தொல்காப்பிய மூலம்

முன்னுரை

மொழியியல் அறிஞர்













NSR100 கல்வி அறக்கட்டளை

தொல்காப்பிய மூலம்

வேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வு

கே.எம். வேங்கடராமையா
ச.வே. சுப்பிரமணியன்
ப.வெ. நாகராசன்

பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம்
திருவனந்தபுரம்
1996

பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகத்தின்

முன்னுரை

தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் தமிழ்மொழியின் இரு கண்கள் ஆகும் என மொழியுலகம் கருதுகிறது.

தொல்காப்பியம் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்குக் குறையாத பழமையுடையது. பல உரையாசிரியர்களால் உரை வகுக்கப் பெற்ற பெருமையை உடையது. தொல்காப்பியத்தின் நேரடித்தாக்கம் மலையாள மொழியிலக்கணமாகிய லா திலகத்திலும், மறைமுகத் தாக்கம் கேசிராஜாவின் கன்னட இலக்கணமாகிய சப்த மஞ்சரியிலும் காணப்படுகிறது. ஆந்திர முதல் இலக்கண நூலிலும் அதன் -றுகள் காணப்படுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

தொல்காப்பிய ஆய்வு ஆழமாக நடைபெறவேண்டும் என்ற நோக்கத்துடன் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக உழைத்து வருகிறோம். தொல்காப்பியப் படிப்பில் முனைந்து நின்ற பாளையங்கோட்டை திரு. அ. அருளப்பனாருக்கு 1972இல் ஓராண்டிற்கான முதுநிலை ஆய்வுத்தகைமை வழங்கப்பட்டது. பேரா உ.சுப.மாணிக்கனாருக்கு 20-6-79 முதல் 2 மாதங்களுக்கும் 18-8-82 முதல் 10 மாதங்களுக்கும் முதுநிலை ஆய்வுத்தகைமை வழங்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தோடு தொடர்பு கொண்ட சமயத்தில் தொல்காப்பியச் சொல்லடைவும், விளக்கமும் எழுதுவதற்கு ஒரு மொழியியல் ஆய்வாளர் நியமிக்கப்பட்டார். விரிவுரை ஒன்று எழுதுமாறு பேரா. வ.சுப.மாணிக்கனாருக்கு ஈராண்டு உயரிய தகைமையைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கியது. தொல்காப்பியத்தின் இளம்பூரணர் உரையைச் செப்பம் செய்வதற்காகப் பேரா. அடிகளாசிரியர் நியமிக்கப் பெற்றார். எனினும் தொல்காப்பிய ஆய்வில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை.

பன்னாட்டுத் திராவிடவியல் நிறுவனம் தொல்காப்பியப்

பாடவேறுபாடுகளைத் தொகுப்பதற்காக முனைவர் ச.வே. சுப்பிரமணியத்திற்குத் தகைமையொன்றை ஈராண்டு வழங்கியது. தமிழ்நாட்டின் சுவடி நூலகங்கள் பலவற்றிற்கும் அவர் சென்று சுவடிகளின் விவரங்களைக் குறித்துக் கொண்டதுடன், சென்னை டாக்டர். உ.வே. சாமிநாதய்யர் நூலகத்தில் ஓரிரு மாதங்கள் மயிலம் பேரா. சிவசுப்பிரமணியத்தின் உதவியுடன் பாடபேதங்களைத் திரட்டினார். அவரைத் தொடர்ந்து பேரா. கே.எம். வேங்கடராமையா திரு.ச.வே.சு. தொகுத்த பல செய்திகளை முறைப்படுத்தியும், புதியன திரட்டியும், விரிவாக்கியும், பல நிறுவனங்களுக்குச் சென்று செய்தி சேகரித்தும் மூன்று அதிகாரங்களையும் செம்மைப்படுத்தினா விபத்து ஒன்றில் அவர் காலமானதால் பழைய இலக்கண இலக்கியங்களில் தேச்சியுள்ள அறிஞர் ப.வெ. நாகராசனார் கையெழுத்துப் படியை மீண்டும் பரிசோதித்து, மூல பாடத்தையும் பாடவேறுபாடுகளையும் புதிதாக எழுதி. சில நூலகங்களுக்குச் சென்று, அச்சான நூல்களைப் பார்த்து உறுதி செய்து. அச்சுப்பிழை ஏதுமின்றிச் சிவகாசியில் சண்முகா அச்சகத்தில் லேசர்படி ஒன்றை உருவாக்கினார்.

பாடபேதங்களின் அடைப்படையில்தான் மூலபாடத்தை நிர்ணயம் செய்ய முடியும். பல பதிப்புக்கள் பாடபேதங்களை வெளியிடாமல் இருப்பதைக் கண்டு ஆய்வாளர்கள் வருந்தினர். அந்தக் குறையைப் போக்குவதற்காகவே கிடைத்துள்ள பாடவேறுபாடுகள் அனைத்தையும் இந்நூலில் தொகுத்துக் கொடுத்துள்ளோம். மூலபாடத்தை இப்பதிப்பில் நிறுவ முயலவில்லை. அதனை வருங்காலத்தில்தான் செய்து முடிக்க வேண்டும்..

தொல்காப்பியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு உருவாகி முடியும் தருணத்தில் இருக்கிறது.அதனையும் விரைவில் வெளியிட முயன்று வருகிறோம். இந்தப் பணி சிறக்கப் பலவகையிலும் உதவி புரிந்த தமிழக அரசிற்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். முன்னாள் கல்வியமைச்சராக

இருந்த பேரா. க. அன்பழகன், முன்னாள் முதலமைச்சர்
கலைஞர். மு. கருணாநிதி, அதன் பின்னர்க் கல்வியமைச்சரான
பேரா. க. பொன்னுசாமி. நிதியமைச்சர்

டாக்டர். இரா. நெடுஞ்செழியன், முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா,

தமிழ்ப் பண்பாட்டுத் துறை முன்னாள் செயலர்
திரு. சா.பா. இளங்கோவன்,

இந்நாட்செயலர் திரு. கிறுத்துதாஸ் காந்தி

ஆகியவர்களுக்கும், ஏனைய அன்பர்களுக்கும்

ஓலைச்சுவடி நூலகத்தாருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி,


பி கோபிநாதன் நாயர்
வெளியீட்டு இயக்குநர்


வ அய் சுப்பிரமணியம்
இயக்குநர்

திருவனந்தபுரம்

21-11-1995

https://ctlt.cict.in/s_book/1tholkappiyam/1_tholkappiyam.pdf





‘உலகப் பெருந்தமிழர்’

வ.அய்.சுப்ரமணியம்

மொழியியல் அறிஞர்













NSR100 கல்வி அறக்கட்டளை

‘உலகப் பெருந்தமிழர்’


வ.அய்.சுப்ரமணியம்

{[HTTPS://WWW.KEETRU.COM/INDEX.PHP/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/28777-2015-07-08-03-19-43](https://www.keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/28777-2015-07-08-03-19-43)}

பி.தயாளன்

பிரிவு: தமிழ்நாடு
வெளியிடப்பட்டது: 08 ஜூலை 2015

(😊) (😊)



தமிழ் வளர்ச்சிக்குச் சிறப்பாக தொண்டாற்றியவர், தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் ஆழ்ந்த புலமை கொண்டவர், ஆராய்ச்சி நெறிமுறைகளில் முதிர்ச்சியுடன் செயல்பட்டவர், சிந்தனையும் செயலும் தமிழுக்காகவே என வாழ்ந்தவர் வ.அய்.சுப்ரமணியம். ஈழத் தமிழறிஞரான முனைவர் தனிநாயகம் அடிகளோடு இணைந்து உலகத் தமிழாய்ராய்ச்சிக் கழகத்தை உருவாக்கி அதன் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்தவர். பல்வேறு நாடுகளில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவதற்கு பாடுபட்டார். உலக அளவில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நடைபெற்று வந்த தமிழ் ஆய்வுகளை ஒருங்கிணைந்தார்.

நாகர்கோவில் வடசேரியில் 18.02.1926 அன்று பிறந்தார். தந்தை கே. அய்யம்பெருமாள் பிள்ளை, தாய் சிவகாமி. கூடசேரியில் 1941-ஆம் ஆண்டு எஸ்.எம்.ஆர்.வி. இந்து உயர்நிலைப்பள்ளியில் உயர்நிலைக் கல்வியை முடித்தார். பின்னர், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்துவக் கல்லூரியில் சேர்ந்து இடைநிலைக் கல்வி மற்றும் இளங்கலைப் பட்டமும் பெற்றார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1946-ஆம் ஆண்டு தமிழில் முதுகலைப் பட்டமும், அமெரிக்காவிலுள்ள இண்டியானா பல்கலைக் கழகத்தில் 1957-ஆம் ஆண்டு மொழியியலில் 'முனைவர்' பட்டமும் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 1983-ஆம் ஆண்டு முதுமுனைவர் (டி.லிட்) பட்டமும், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் 2002-ஆம் ஆண்டு முதுமுனைவர் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தன. திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் 1947 முதல் 1953 வரை தமிழ் விரிவுரையாளராகவும், திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் 1953 முதல் 1958 வரை பேராசிரியராகவும் பணியாற்றினார். இதே பல்கலைக்கழகம் கேரளப் பல்கலைக்கழகமாக உருமாறியபோது 1965 வரை அந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மற்றும் மொழியியல் துறைத் தலைவராகப் பணியாற்றினார். மேலும் 1978-ஆம் ஆண்டு கேரளப் பல்கலைக் கழக கீழைக்கலைப் புலத்தின் முதன்மையராகப் பணியாற்றினார்.

ஈழத் தமிழறிஞரான முனைவர் தனிநாயகம் அடிகளோடு இணைந்து உலகத் தமிழராய்ச்சிக் கழகத்தை உருவாக்கி அதன் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்தவர். பல்வேறு நாடுகளில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவதற்கு பாடுபட்டார். உலக அளவில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நடைபெற்று வந்த தமிழ் ஆய்வுகளை ஒருங்கிணைத்தார்.

தமிழுக்கென்று ஒரு பல்கலைக் கழகம் தொடங்கப்பட வேண்டும் என்ற உலகத் தமிழர்களின் நீண்டகாலக் கனவு நனவானபோது, அதன் முதல் துணைவேந்தராகப் பொறுப்பேற்று தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு தொலைநோக்குடன் திட்டமிட்டு கொடுத்தவர்.

தமிழகத்திலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உலக நாடுகளில் அமைந்திருக்கும் தமிழ்த்துறைகள் செய்துவரும் ஆய்வுகளை நெறிப்படுத்தவும் முறைப்படுத்தவும் தீவிரமாகப் பாடுபட்டார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அவர் துணைவேந்தராக பணியாற்றிய காலத்தில், தமிழக அரசிடமிருந்து ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பெற்று, அதில் வியத்தகு கட்டிடங்களை எழுப்பி சாதனை படைத்தவர்.

திறமையுள்ளவர்களைக் கண்டறிந்து, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வரவேற்றுப் போற்றினார். திருவனந்தபுரத்தில் திராவிட மொழியியல் பள்ளி, இந்திய நாட்டுப்புறவியல் நிறுவனம் முதலிய பல்வேறு அமைப்புகளைத் தழைக்கச் செய்தவர் அவர்.

இந்தியர்கள் ஆங்கிலேய ஆட்சியினரால் அழைத்துச் செல்லப்பட்டு தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சுரங்கத் தொழில் முதலியவற்றில் ஈடுபடுத்தப்பட்டனர். தென்கிழக்காசிய நாடுகளில் குடியேற்றப்பட்ட இந்திய மக்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அந்நாடுகளில் வாழும் தமிழர்கள் குறித்து முழுமையான செய்திகள் தொகுக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்தார் வ.அய். சுப்ரமணியம். அதற்காக பல்வேறு நாடுகளுக்கும் தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகத்தின் சார்பில் பல பேராசிரியர்களை அனுப்பி தமிழர்கள் பற்றிய செய்திகளையெல்லாம் திரட்டி தொகுத்து நூல்களாக வெளியிட்டார்.

தமிழ்நாட்டிலுள்ள உள்ள தமிழ்ப் பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியோரை அவ்வப்போது கூட்டிக் கருத்தரங்குகள் நடத்தி ஒருமுகப்படுத்தினார்.

மேலும், இலங்கைத் தமிழ் அறிஞர்களின் உயிருக்கே ஊறு ஏற்பட்ட காலக்கட்டத்தில் அவர்களில் பலரை வருகைப் பேராசிரியர்களாக அழைத்து தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுப் பணிகள் தொடர்வதற்கு ஏற்பாடு செய்தார். ஈழத்தமிழ் மாணவர்களுக்கு இங்கு கல்வியைத் தொடர வழிவகுத்தார்.

காவிரிப் பிரச்சனை முற்றிய கால கட்டத்தில், அப்பிரச்சனை குறித்து தமிழக அரசு நமது தரப்பு நியாயங்களை எடுத்துரைப்பதற்காக, தஞ்சைப் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் சங்க இலக்கியத்திலும், தற்கால இலக்கியத்திலும், கல்வெட்டுகளிலும் காவிரி குறித்து வெளியான செய்திகள் அத்தனையும் தொகுத்து நூல் ஒன்றினை வெளியிட ஏற்பாடு செய்தார். இதன் விளைவாக நியாயமான உரிமை நிலைநாட்டப்பட்டது.

ஆரம்பப் பள்ளியில் கூட தமிழ்வழிக் கல்வி வேண்டும் என போராட வேண்டிய இச்சூழலில், மருத்துவம் பொறியியல் முதலிய படிப்புகளைத் தமிழிலேயே

நடத்தத் துணிந்து திட்டமிட்டார். அறிஞர்கள் பலரைக் கூட்டிவைத்து அதற்கான நூல்களை உருவாக்கினார். ஆனால், தமிழக அரசின் அனுமதி கிடைக்காததால் அந்தத் திட்டத்தை அவரால் நிறைவேற்றிட இயலவில்லை.


தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழ்ச் சுவடிகள், தமிழர்கள் குறித்த கல்வெட்டுகள், பட்டயங்கள் முதலியவற்றை சேகரிக்க பெருமுயற்சி செய்தார். லண்டனில் உள்ள புகழ்பெற்ற இந்திய அலுவலக நூலகத்தில் உள்ள ஆவணங்களை மைக்ரோ பிலிமில் பதிவு செய்து தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் பாதுகாப்பாக வைத்தார். இந்தியாவில் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலும் இந்த ஆவணங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தைச் சுற்றியுள்ள கடலில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக, அகழ்வாய்வு நிறுவனத்தை இராமேசுவரத்திற்கு அருகில் உள்ள மண்டபத்தில் நிறுவினார். இதன் மூலம் மறைந்த பூம்புகார் பற்றிய புதிய உண்மைகள் வெளிப்பட்டன.

ஆந்திர மாநிலம் குப்பத்தில் உள்ள திராவிடப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக 1997-ஆம் ஆண்டு பணியேற்றார். அப்போது, திராவிட மொழிகளில் அகராதி ஒன்றினைத் தொகுக்கும் திட்டத்தை வகுத்துத் தக்க அறிஞர்களைக் கொண்டு நிறைவேற்றினார்.

தமிழுக்குத் தொண்டாற்றுவதையே தமது வாழ்நாள் கடமையாகக் கொண்ட இந்த அறிஞரின் பெருமைகளை உணர்ந்து உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் இவருக்கு முனைவர் பட்டம் உட்பட பல விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளன.

நாகர்கோவிலில், உலகத் தமிழர் பேரமைப்பு 2005-ஆம் ஆண்டு நடத்திய மாநாட்டில் இவருக்கு **‘உலகப் பெருந்தமிழர்’** எனும் விருதினை வழங்கியது.

அனைத்து வகையிலும் தமிழ் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய வ.அய்.சுப்ரமணியம் 2009-ஆம் ஆண்டு காலமானார். தஞ்சையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகமாக உயர்ந்திட வேண்டும் என்பதே அவரது உயரிய நோக்கமாகும். அவரது நோக்கத்தை நிறைவேற்ற வேண்டியது தமிழர்களின் கடமையாகும். அதுவே அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும்.



வ.அய்.சுப்ரமணியம்

காணொலி

மொழியியல் அறிஞர்














NSR100 கல்வி அறக்கட்டளை



காணொலி


பேரறிஞர் வ. அய் . சுப்பிரமணியம்
(வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம்)

VI Subramoniam

https://www.youtube.com/watch?v=JXV1Qfy8Y8w

[1:35:35]

முனைவர் வ. ஐ. சுப்பிரமணியம் (வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம், பெப்ரவரி 18, 1926 - ஜூன் 29, 2009) மொழியியல் அறிஞரும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரும் ஆவார். தமிழ்ப்பணி புதுச்சேரியில் மொழியியல் நிறுவனம் உருவாகவும் தமிழ்ப்பல்கலைக்கழகம் செழித்து வளரவும் காரணமானவர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருமுறை துணைவேந்தராகப் பணியாற்றியவர். ஆந்திராவில் உள்ள குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் மூலகர்த்தாவாக விளங்கியதுடன் அப்பல்கலைக்கழகத்தின் முதலாவது இணைவேந்தராகவும் விளங்கியவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றம் பெறவும் காரணமானவர். உலகத்தமிழ் மாநாடுகளைத் தனிநாயகம் அடிகளார் நடத்தப் பக்க பலமாக இருந்தவர்.



வ.அய்.சுப்ரமணியம்

நூற்றாண்டு

மொழியியல் அறிஞர்













NSR100 கல்வி அறக்கட்டளை

வ.அய்.சுப்பிரமணியம் நூற்றாண்டு

தமிழ்ப் பெருங்கனவை மெய்ப்பட வைத்தவர்!

https://www.hindutamil.in/news/opinion/columns/tribute-to-v-i-subramanyam-100th-birthday-explained-idhu-bro



தமிழவேள் உமா மகேசுவரனார், பாரதியார், பாரதிதாசன் மேலும் பல தமிழ் மூதறிஞர்களின் நூற்றாண்டுக் கனவாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இருந்தது. இதன் முதல் துணைவேந்தராகப் பொறுப்பேற்ற வ.அய்.சுப்பிரமணியம் தமது பரந்து விரிந்த ஆய்வுப் புலமையால் இக்கனவை மெய்ப்படவைத்துக் கைவசம் ஆக்கினார். தமது முதல் ஐந்தாண்டுக் காலப் பணியினை முடித்து விடைபெற்றபோது, தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் வ.அய்.சு. எழுதிய வாழ்த்துக் கடிதம் ஓர் அறிவு சாசனம்.


அதிலிருந்து: 'இன்று (31.07.1986) மாலை ஐந்து மணியுடன் பொறுப்பை ஒப்புவித்து நான் திருவனந்தபுரம் செல்கிறேன்... பரதன் பாதுகாத்த பாதுகையைப் போல் பிறர் கையில் மகிழ்ச்சியுடன் விட்டுச்செல்லும் உணர்வு ஏற்படுகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகம் பிற பல்கலைக்கழகங்கள் போன்ற ஒன்றன்று.

இது உயராய்வு மையம். இங்கே அறிவு சான்ற சிலரே இடம்பெற முடியும். இடம்பெற்றவர்களும் தமது அறிவாற்றலை வெளிப்படுத்தத் தொடர்ந்து தம்மைத் தாமே தேர்வுக்குட்படுத்திக்கொள்ள வேண்டும். என்று ஆய்வின் தரம் குறைகிறதோ அன்று தமிழ்ப் பல்கலைக்கழகம் தளர்ந்துவிடும். நல்கைகள்

குறையும். இந்த நிறுவனம் நிலைகுலைந்துவிடும். இதனை ஒவ்வொருவரும் நினைவிற் கொள்வது நன்று.'

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஏ.சி.செட்டியார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ஆகியோரிடம் பயின்றவர் அறிஞர் வ.அய்.சு. பின்னர், திருவனந்தபுரம் சென்று வையாபுரிப் பிள்ளையின் ஆய்வில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இந்தக் காலத்தில் அமெரிக்காவின் ராக்பெல்லர் அறக்கட்டளை நடத்திய மொழியியல் பயிற்சியில் கலந்துகொண்டு, அமெரிக்கா செல்லும் வாய்ப்பைப் பெற்றார். அங்கு இண்டியானா பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஹவுஸ் ஹோல்டரின் வழிகாட்டலில் முனைவர் பட்டம் பெற்றார்.


(😊)(😊)(😊) @@@@@ (😊)(😊)(😊)











வ.அய்.சுப்ரமணியம்

அஞ்சலி

மொழியியல் அறிஞர்









DRAVIDIAN UNIVERSITY

Knowledge is Power



தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

केंद्रीय शास्त्रीय तमिऴ संस्थान

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL - CHENNAI



ந சுப்பு ரெட்டியார் 1916 2016 100

NSR100 கல்வி அறக்கட்டளை

அஞ்சலி

வ.அய்.சுப்ரமணியம்

https://www.jeyamohan.in/3299/

(😊) @@@@@@@@@@@@@@@ (😊)

குமரிமாவட்டம் நவீனத் தமிழாய்வில் அளித்துள்ள கொடை மிக முக்கியமானது. கவிமணிதேசிக வினாயகம் பிள்ளை, கெ.என்.சிவராஜபிள்ளை, எஸ்.வையாபுரிப்பிள்ளை, வித்வான் லட்சுமணபிள்ளை, கே.கே.பிள்ளை, செய்குத்தம்பிப் பாவலர், பேரா ஜேசுதாசன் என அந்தப்பட்டியலின் முதன்மைப்பெயர்கள் பல. அந்த முதல்வரிசைப்பட்டியலில் இடம்பெறுவது பேரா வ.அய்..சுப்ரமணியம் அவர்களின் பெயர்.

நாகர்கோயிலில் வடசேரியில் 1926 ல் பிறந்த வ.அய்.சுப்ரமணியம் ஸ்காட் கிறித்தவக் கல்லூரியில் புகுமுகவகுப்பும் இளங்கலையும் படித்துவிட்டு சிதம்பரம் அண்ணாமலை பல்கலையில் தமிழில் முதுகலை முடித்தார். அமெரிக்காவில் உள்ள இண்டியானா பல்கலையில் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றார். மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, எஸ்.வையாபுரிப்பிள்ளை ஆகியோரைப்போல திருவனந்தபுரத்தில் நெடுநாள் பணியாற்றினார். 1965 வரை கேரள பல்கலைகழகத்தில் தமிழ்த்துறைத்தலைவராக இருந்தார்.

மேலைநாட்டு பல்கலைகழகங்களில் நடக்கும் தமிழாய்வுகளை எல்லாம் தமிழகத்தில் ஒருங்கிணைக்கவும் அந்த தரத்திலான தமிழாய்வுகள் இங்கே நடக்கவும் ஓர் உலகத்தரமான பல்கலைக் கழகம் தேவை என்று உணர்ந்த எம்ஜியார் தஞ்சை தமிழ்பல்கலைகழகத்தை ஆரம்பித்தார்.1981ல் தஞ்சை தமிழ்பல்கலைகழகத்தின் நிறுவன துணைவேந்தராக பணியாற்ற ஆரம்பித்த வ.அய்.சுப்ரமணியம் 1986ல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டபோது அப்போதைய அரசியலாளர்களால் அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார். அந்த பல்கலைக்கழகம் அந்நிமிடம் சிதிலமடைய ஆரம்பித்து இன்று கிட்டத்தட்ட அழிந்துவிட்டது.

அதை முன்னுணர்ந்ததுபோல தன்னுடைய விடுதல் குறிப்பில் வ.அய்.சுப்ரமணியம் இவ்வாறு எழுதியிருந்தார். "…என்று ஆய்வின் தரம் குறைகிறதோ அன்று தமிழ்பல்கலைக்கழகம் தளர்ந்துவிடும். நல்கைகள் குறையும். பொருள்முட்டுப்பாடு தோன்றி தமிழ்ப்பண்பாட்டை காத்து வளர்க்கும் இந்த நிறுவனம் நிலைகுலைந்துவிடும். இதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்வது நன்று…"

நான் இரண்டுமுறை மட்டுமே வ.அய்.சுப்ரமணியம் அவர்களைச் சந்தித்திருக்கிறேன். 1988 வாக்கில் அவர் தஞ்சை தமிழ்பல்கலையில் இருந்து விடுபட்டு நாகர்கோயிலில் இருந்த நாட்களில். முதல்முறை எஸ்.எல்.பி பள்ளி வளாகத்தில் சுந்தர ராமசாமியுடன் நடக்கச்சென்றபோது வ.அய்.சுப்ரமணியம் அவரது சிறு குழுவுடன் அமர்ந்து பேசிக்கோண்டிருந்தார் .அனேகமாக தினமும் எஸ்.எல்.பி பள்ளிக்கு மாலைநடை வந்துகொண்டிருந்தார்

நாங்கள் அருகே சென்றதும் சுந்தர ராமசாமி வணக்கம் சொன்னபின் என்னை அறிமுகம்செய்துவைத்தார். வ.அய்.சுப்ரமணியம் என்னை பார்த்து அளவோடு சிரித்தபின் "எந்த ஊர்?" என்றார். நான் "திருவரம்பு" என்றேன். "அங்கே என்ன கோயில் இருக்கிறது?" என்றார்."மகாதேவர் கோயில்..." என்றேன்.

வ.அய்.சுப்ரமணியம் "அந்த ஊர் ஆற்றுக்கரையில்தானே இருக்கிறது?" என்றார். "ஆமாம் தாம்ரவருணி கரையில்" [குமரியில் ஒரு தாமிரவருணி உண்டு] அவர் "கோயில் எந்த திசை நோக்கி தர்சனம்?" என்றார்.நான் "மேற்கே" என்றேன். அவர் என்னை கூர்ந்து நோக்கி "வழக்கமாக மேற்குநோக்கி கோயில்களை அமைப்பதில்லையே"என்றார். நான் "பொதுவாக கேரள வாஸ்துகலையின்படி ஆற்றங்கரைக் கோயில்கள் ஆற்றை நோக்கித்தான் இருக்கும்" என்றேன். "திர்ப்பரப்பு கோயில்கூட மேற்கே நோக்கித்தான் இருக்கிறது"

"நீங்கள் மலையாளிகளா?" என்றார் வ.அய்.சுப்ரமணியம் "ஆமாம்"என்றேன். "ஆனால் தலைமுறைகளாக தொழில் தமிழில்தான்" என்றேன். மெல்ல சிரித்து "மேற்கே கோட்டயம் வரை ஒருகாலத்தில் தமிழ்தானே அதிகாரபூர்வ மொழி" என்று சொல்லிவிட்டு வ.அய்.சுப்ரமணியம் "நாயர்களில் பிடாகை அமைப்பு உண்டா?" என்றார்.

"இருந்திருக்கிறது. மார்த்தாண்ட வர்மா காலம் வரை 108 பிடாகை என்ற அமைப்பு இருந்திருக்கிறது. மார்த்தாண்ட வர்மா அதை அழித்தார். அதன்பின் சிறிய சிறிய பிடாகைகள் இருந்தன. வேலுத்தம்பி தளவாயின் கலகத்துக்குப் பின் கர்னல் மன்றோ அவற்றையும் இல்லாமலாக்கினார். வேளாளர்களின் பதினெட்டு பிடாகை என்ற அமைப்பு அப்படி அழியாமல் அதே அதிகாரத்துடன் மருமக்கத்தாய ஒழிப்பு வரை நீடித்தது" என்றேன்

வ.அய்.சுப்ரமணியம் சுந்தர ராமசாமியிடம் "நல்லது, ஒரு எழுத்தாளனுக்கு அவனுடைய மண்ணைப்பற்றியும் வரலாற்றைப்பற்றும் தெரிந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் என்ன எழுதினாலும் பயன் இல்லை" என்றார். அதன்பின் என்னைப்பார்த்து `சரி, நீ போ` என்பது போல தலையசைத்தார்

நான் அவரது தோரணையால் எரிச்சல் அடைந்தேன். ஒன்று அவர் கிட்டத்தட்ட அச்சுத்தமிழில் பேசினார். என்னை ஒரு மாணவனைப்போல நடத்தினார் – அதாவது பழங்கால கண்டிப்பான ஆசிரியர்களின் தோரணையில். என்னை அவர் ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. ஏன் சுந்தர ராமசாமியையும் அவர் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

"அவர் நெஜம்மாவே ஒரு பழங்கால வாத்தியார்தான்" என்றார் சுந்தர ராமசாமி "ஆனா கல்விப்பணிக்காகவே உடல் பொருள் ஆவி எல்லாத்தையுமே ஒப்படைச்சுகிட்ட பழங்கால வாத்தியார்கள் உண்டுல்ல, அப்டிப்பட்டவர். பெரிய விஷயங்களை பண்ணினவர்"

"அவ உங்களை மதிக்கலியே" என்றேன். "அவருக்கு மாடர்ன் லிடரேச்சர்னா என்னன்னே தெரியாது. லிட்டரேச்சர்னா அது ரிசர்ச் மெட்டீரியல்தான் அவருக்கு. சுத்தமா டேஸ்டே கெடையாது. அவர் ஒரு ஸ்காலர் அவ்ளவுதான்"

"வையாபுரிப்பிள்ளை மாதிரி?" என்றேன். "சேச்சே, வையாபுரிப்பிள்ளை பெரிய இலக்கிய ரசிகர். அந்த ரசனை அவரோட லேங்வேஜ் ஸ்டைலிலேயும் தெரியும். இவருக்கு அப்டி ஒண்ணுமே கெடையாது. இவரோட தமிழ் நடை இரும்பை உருக்கி வார்த்தது மாதிரி இருக்கும். தமிழ்ப்பண்பாடு மேலே தீராத ஆர்வத்தோட ஆராய்ச்சி செய்த அறிஞர் இவர். அப்றம் அப்டிப்பட்ட ஆய்வுகளை எல்லாம் ஒருங்கிணைக்கத் தெரிஞ்ச நிர்வாகி. அவ்ளவுதான்"

பின்னர் பலமுறை அங்கேயே வ.அய்.சுப்ரமணியம் அவர்களைப் பார்த்தேன். சும்மா ஒரு தலையசைப்பு அவ்வளவுதான். அதன்பின் ஒருமுறை அவரை திருவனந்தபுரம் விமான நிலையத்தில் பார்த்தேன். அவர் அருகே சென்று வணக்கம் சொன்னேன். "நீ யார்?" என்றார். நான் என்னைப்பற்றி சொன்னேன் "இப்போது நினைவு வருகிறது" என்றார். அத்துடன் சரி. நான் விலகிப்போய் அமர்ந்துகொண்டேன்

அவர் உயர்பதவிகளில் இருந்தமையால் எப்போதுமே அவரைத்தேடி வருபவர்களிடம் மிக எச்சரிக்கையாக இருப்பார். நம்மவர்கள் இரண்டாம் சந்திப்பிலேயே சிபாரிசு கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். பல்வேறு உயர்பதவிகளை வகித்த வ.அய்.சுப்ரமணியம் தன் ஊதியத்துக்குமேல் எதையுமே ஈட்டியரவல்ல. தன் குடும்ப சொத்தான ஓட்டுவீட்டில் சாதாரணமாக குடியிருந்தார்.

அ.கா.பெருமாள் வ.அய்.சுப்ரமணியம் அவர்களைப்பற்றி நிறையவே சொல்லியிருக்கிறார். வ.அய்.சுப்ரமணியம் தமிழ்நாட்டில் பெரும்பாலானவர்கள்

எந்தவிதமான முறைமையும் இல்லாமல் முழுமையான வாசிப்பு இல்லாமல் விருப்பப்படி தமிழாராய்ச்சி செய்வதன்மேல் ஒருவகையான பொறுமையின்மை கொண்டிருந்தார். அத்தகையவர்களை அவர் நெருங்கவே விடுவது இல்லை. அதேசமயம் உண்மையான ஆய்வாளர்களுக்கு மிக இனியவராக ஆகி நெருங்குவ்து அவர் இயல்பு. அ.கா.பெருமாள் வ.அய்.சுப்ரமணியம் அவர்களுக்கு அண்மையானவராகவே இருந்தார்.

எம்.ஜி.ஆர்தஞ்சை தமிழ்பல்கலைக் கழகத்தை வ.அய்.சுப்ரமணியம் அவர்களின் ஆலோசனைப்படி அவரை முன்னிறுத்தியே தொடங்கினார். உலகத்தரமான ஓர் தமிழாய்வு நிறுவனமாக தஞ்சை தமிழ்பல்கலையை உருவாக்க வ.அய்.சுப்ரமணியம் அவர்களால் முடிந்தது. அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சியை சுந்தர ராமசாமி அவரது ஒரு கட்டுரையில் சொல்கிறார்.

பல்கலை துணைவேந்தராக வ.அய்.சுப்ரமணியம் பொறுப்பேற்று அமர்ந்திருக்கும்போது எம்.ஜி.ஆர் அவரைச் சந்திக்க பல்கலைக்கு வந்தார். எம்ஜிஆர் வரும்செய்தி வ.அய்.சுப்ரமணியத்துக்கு அறிவிக்கப்பட்டது. வ.அய்.சுப்ரமணியம் வாசலுக்கு வந்து எம்.ஜி.ஆர்ரை சந்தித்து வரவேற்க வேண்டும் என்று சில சொன்னார்கள். மரபுப்படி துணைவேந்தர் கவர்னரை மட்டுமே அப்படி வரவேற்க வேண்டும், மரபுகளை மீறக்கூடாது என்று வ.அய்.சுப்ரமணியம் மறுத்துவிட்டார். அதை எம்.ஜி.ஆரும் புரிந்துகொண்டார்.

வ.அய்.சுப்ரமணியம் அவர்களின் கனவான தஞ்சை தமிழ்பல்கலைகழகம் எம்ஜியாரின் மரணத்துக்குப் பின் அரசியல் ஊடுருவலால் சீரழிந்து செயல்ற்று போவதை அவர் கண்டார். இன்று அது ஒரு மாபெரும் சடலம்போல மட்கிக்கொண்டிருக்கிறது. அந்த அழிவு வ.அய்.சுப்ரமணியம் அவர்களை மிகவும் துயரத்தில் ஆழ்த்தியதென்றாலும் அவர் சோர்ந்து போகவில்லை. குப்பம் திராவிடப் பல்கலைக்குப் பொறுப்பேற்று தமிழாய்வுக்கும் தென்னிந்தியப் பண்பாட்டாய்வுக்கும் அவர் அரும்பணியாற்றியிருக்கிறார். கிட்டத்தட்ட தஞ்சை பல்கலை செய்ய நினைத்ததை அவர் குப்பம் திராவிட பல்கலையில் செய்து முடித்தார். இன்று தமிழ் பண்பாட்டாய்வில் முக்கியமான எல்லா நூல்களும் குப்பம் திராவிடப் பல்கலை வெளியீடாக வந்தவையே

வ.அய்.சுப்ரமணியம் அவர்களின் பங்களிப்பு என்ன? மரபான தமிழறிஞராக இருந்தாலும் அவர் அமெரிக்க பல்கலையில் பயின்றவர். ஆகவே முறைமை மீது அழுத்தமான பற்று கொண்டவர். தமிழாய்வை அறிவியல் விதிகளின்படி மட்டுமே நடத்தவேண்டும் என்பதில் மிகுந்த பிடிவாதத்துடன் இருந்தார். தமிழாய்வு என்றால் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்துதல் என்ற சமவாக்கியம் இருந்த சூழலில் இந்த அறிவியல் அணுகுமுறையே அவர் தமிழுக்கு அளித்த பெரும் கொடை.


இந்நோக்கு மொழி ஆய்வில் அறிவியல் அடிப்படையை என்றுமே வலியுறுத்திய எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களிடம் இருந்து அவர் பெற்றுக்கொண்டது. வ.அய்.சுப்ரமணியம் அவர்களின் ஆழமான தமிழ்ப்பற்றுதான் தமிழாய்வுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணிக்கச் செய்தது. ஆனால் வ.அய்.சுப்ரமணியம் அந்த தமிழ்ப்பற்று தன் ஆய்வுக்கு குறுக்கே வர அனுமதித்தவரல்ல. இந்த நடுநிலைமை தமிழாய்வில் என்றும் தேவையாக இருக்கக் கூடிய ஒன்று. தன் மாணவர்களில் அந்த நோக்கை வலியுறுத்தி பயிற்றுவித்தது தமிழில் ஒரு மரபை உருவாக்கியது.

வ.அய்.சுப்ரமணியம் அவர்கள் நேற்று 29-6-2009 அன்று காலமானார். அவர்களுக்கு அஞ்சலி

(☺)(☺) @@@@@ (☺)(☺)
















வ.அய்.சுப்ரமணியம்

வாழ்க்கை

மொழியியல் அறிஞர்













NSR100 கல்வி அறக்கட்டளை

வஐ சுப்பிரமணியம்

{https://tamil.wiki/wiki/%E0%AE%B5.%E0%AE%90._%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D}

வ. ஐ. சுப்பிரமணியம் (வ.அய். சுப்ரமணியம்; வடசேரி ஐயம்பெருமாள் சுப்பிரமணியம், பிப்ரவரி 18, 1926 - ஜூன் 29, 2009) மொழியியல் அறிஞர், ஆய்வாளர், கல்வியாளர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர். முதல் உலகத் தமிழ் மாநாடு நடக்கவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாகவும் காரணமாக இருந்தார். தென்னிந்திய மொழிகளை திராவிடம் என்னும் ஒற்றைக் கருத்தாக்கத்தின் கீழ் ஆய்வு செய்யும் கருத்தை முன்வைத்து, குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம் உருவாகக் காரணமானவர். தென்னிந்தியப் பண்பாட்டாய்வுக்குப் பெரும் பங்காற்றியவர். அறிவியல்பூர்வமான மொழியியல் ஆய்வின் முன்னோடிகளில் ஒருவர்.

பிறப்பு,கல்வி

வ.ஐ. சுப்பிரமணியம் நாகர்கோயில் அருகில் உள்ள வடசேரியில் பிப்ரவரி 18, 1926 அன்று ஐயம்பெருமாள் - சிவகாமி இணையருக்கு பிறந்தார். வடசேரியிலுள்ள எஸ்.எம். ஆர்.வி. பள்ளியில் பள்ளிக்கவியை முடித்தார். நாகர்கோவில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரியில் புதுமுக வகுப்பு முடித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிலக்கியத்தில் இளங்கலைப்(பி.ஏ. ஆனர்ஸ்) பட்டம் பெற்றார் (1946). கேரளப் பல்கலைக்கழகத்தில் எஸ். வையாபுரிப் பிள்ளையிடம் ஆய்வு மாணவராகப் பணியாற்றி அவரது வாரிசு என்ற பெயரைப் பெற்றார். அமெரிக்காவிலுள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் மொழியியலறிஞர் ஹவுஸ் ஹோல்டரின் (House Holder) நெறியாள்கையில் மொழியியலில் 1957-ல் முனைவர் பட்டம் பெற்றார்.

தனிவாழ்க்கை

வ.ஐ. சுப்ரமணியம் 1946-57 காலகட்டத்தில் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும், புது தில்லியில் அகில

இந்திய வானொலி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராகவும், கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். 1958-67 ஆண்டுகளில் கேரளப்பல்கலைக்கழகத்தில் தமிழ், மொழியியல் துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றி, பின்னர் 1967 முதல் மொழியியல் துறைத்தலைவராகவும், பேராசிரி யராகவும் பணியைத் தொடர்ந்தார். 1981-86 காலகட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தரானார். 1997-2001 குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர், இடைப்பட்ட காலங்களில் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளியின் மதிப்புறு இயக்குநராகப் பங்காற்றினார்.

வ.ஐ.சுப்ரமணியத்தின் மனைவி இந்திரா. நான்கு மக்கள்.

கல்விப்பணிகள்

வ.ஐ.சுப்பிரமணியம் 1967-ல் கேரளப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையை உருவாக்கி அதன் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியைத் தொடர்ந்தார். புளூம்ஃபீல்ட்(Bloomfield), சோம்ஸ்கி(Noam Chomsky) போன்ற நவீன மொழியியல் அறிஞர்களின் கோட்பாடுகளைத் மொழியியல் ஆய்வில் அறிமுகப்படுத்தினார். அவரது மாணவர்கள் சங்க இலக்கியங்களின் சொல்லடைவுகளில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றனர்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்

1981-ல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டபோது அப்போதைய முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரனால் அதன் முதல் துணைவேந்தராக வ.ஐ.சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டார். அவரது நிர்வாகக் கட்டமைப்பில் மொழித்துறை, சுவடித்துறை, வளர்தமிழ்துறை, கலைத்துறை, அறிவியல் துறை என ஐந்து பெறும் துறைகளும் அவற்றில் உட்பிரிவுகளும் உருவாகின

- சுவடித்துறை- ஓலைச்சுவடி, அரிய கையெழுத்துச் சுவடிகள், கல்வெட்டு மற்றும் தமிழரின் கடல்சார் வரலாற்றாய்விற்காக தொல்லியல் நீரகழாய்வு மையம்
- கலைத்துறை- சிற்பம், இசை, நாடகம்
- வளர் தமிழ்- அயல்நாட்டு தமிழ்க்கல்வி, மொழிபெயர்ப்பு, அகராதியியல், சமூக அறிவியல், அறிவியல், தமிழ் வளர்ச்சி
- மொழித்துறை-இலக்கியம், மொழியியல், தத்துவமையம், பழங்குடி மக்கள் ஆய்வுமையம், நாட்டுப்புறவியல் துறை, இந்திய மொழிகள்

- **அறிவியல் -சித்த மருத்துவம், தொல் அறிவியல், நில அறிவியல், கணிப்பொறி அறிவியல், கட்டடக்கலை**

தமிழ்ப் பல்கலைக்கழக அமைப்பு சார்ந்து தமிழியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. போலந்து, ஜெர்மனி, மலேசியா, சீனா, மொரீசியஸ் எனப் பல நாடுகளைச் சார்ந்தவர்களும், இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கவும், ஆய்வு மேற்கொள்ளவும் வழி செய்தார். அவர் தலைமையில் ஆய்வு செய்த மாணவர்கள் சவெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் இந்தியவியல் துறைகளில் பணிபுரிந்தனர்.

வ.ஐ. சுப்ரமணியத்தின் தலைமையில் பொறியியல், மருத்துவம், இரண்டையும் தமிழ் வழிக் கற்பிக்கும் திட்டத்தில், பாடநூல்களை உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 27 நூல்கள் (பொறியியல் 13, மருத்துவம் 14) உருவாக்கப்பட்டு,அவற்றுள் 18 நூல்கள் வெளிவந்துள்ளன. கலைச்சொல் பட்டியல்கள் உருவாக்கப்பட்டு 4 நூல்களாக வெளிவந்தன. தமிழ்ப் பேரகராதி, கலைக் களஞ்சியப் பணிகளைச் செயல்படுத்தினார். பல்கலைக்கழகம் மூலம் பெருஞ்சொல்லகராதிகள் (5 தொகுதிகள்) 2, கலைக்களஞ்சிங்கள் (30 தொகுதிகள்), சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்(3), பல துறைசார் கலைச் சொல்லகராதிகள்(12) வெளிவந்தன.



குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்

வ.ஐ. சுப்பிரமணியம் நான்கு தென் மாநிலங்களிடையே நிலவும் பண்பாட்டு, மொழி ஒற்றுமைகளைக் கருத்தில் கொண்டு அவற்றை திராவிடம் என்னும் ஒற்றைக் கருத்தாகத்தின் கீழ் ஆய்வு செய்வதன் தேவையை வலியுறுத்தி திராவிடப் பல்கலைக்கழகத்தின் கருத்துருவை ஆந்திர அரசின் ஊராட்சி நிர்வாகச் செயலர் காசிப்பாண்டியனுடன் இணைந்து முன்வைத்தார். பல்கலைக்கழகத்தின் அமைப்புக்குழுவில் பங்காற்றி, திராவிடப் பல்கலைக்கழகத்தின் சட்ட வரைவை உருவாக்கினார்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாள மொழிகள் பேசப்படும் குப்பம் நிலப்பகுதியைத் தேர்வு செய்து 1997-ல் அங்கு திராவிடப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி, நான்கு மொழிகள் இணைந்த ஆய்வை மேற்கொள்ளும் பல்கலைக்கழகமாகக் கட்டமைத்தார். 2001 வரை அதன் இணைவேந்தராகப் பணியாற்றினார்.



மொழியியல்/திராவிடவியல் பணிகள்

வ.ஐ. சுப்ரமணியம் கேரளப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறைத் தலைவராக இருந்தபோது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் விரிவான ஆய்வுகள் நடந்தன. இச்சூழலைப் பயன்படுத்தி 1971-ல் திராவிட மொழியியல் கழகத்தை (Dravidian Linguistic Association) கேரள அரசின் துணையோடு திருவனந்தபுரத்தில் உருவாக்கினார். அந்த ஆண்டே திராவிட மொழிகள் ஆய்விற்கான 'International Journal of Dravidian Linguistics' எனும் ஆய்வு இதழை வெளியிட்டார். ஆண்டுதோறும் வெளிவரும் இவ்விதழ் திராவிட மொழியியல் ஆய்வை அறிவியலின் துணை கொண்டு முன்னெடுத்தது. சமஸ்கிருதம், பிராமி மொழிகளிலுள்ள இலக்கணங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது போல, திராவிட மொழிகள் சிலவற்றின் இலக்கணமும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள. இந்நிறுவனம் வெளியிட்ட முக்கியமான ஆராய்ச்சி நூல்களில் சில:

- **திராவிடக் களஞ்சியம் -3 தொகுதிகள் (Dravidian Encylopaedia -3 Vol),**
- **திராவிடப் பழங்குடி மக்கள் களஞ்சியம் - 3 தொகுதிகள் (Encyclopaedia of Dravidian Tribes - 3 Vols),**
- **மேற்கு வங்காளம் - ஒரு கையேடு - 2 தொகுதிகள் (A handbook of West Bengal 2 Vols),**

- தொல்காப்பிய மூலபாட வேறுபாடுகள் (Textual vanation of Tolkappiyam),
- தொல்காப்பியச் சொல்லடைவு (Index of Tolkappiyam),
- தென்னிந்தியாவில் சமணம் (Jainism of South India),
- தெலுங்கு இலக்கணக் கோட்பாடுகள் (Theories of Telugu Grammer),
- கிரந்த எழுத்துக்கள் (The Grantha Script)

திராவிட மொழியியல் பள்ளி

திராவிட மொழியியல் கழகம் மற்றும் அவ்வமைப்பின் இதழ் வெளியீடு ஆகியவற்றின் தொடர்ச்சியாக 'பன்னாட்டுத் திராவிட மொழியியல்' பள்ளியை 1977-ல் திருவனந்தபுரத்தில் உருவாக்கி அதன் மதிப்புறு இயக்குநராக 2001 முதல் 2009 வரை பணியாற்றினார்.

உலகத் தமிழ் மாநாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

1964 -ல் டெல்லியில் நடைபெற்ற அகில உலக கீழ்த்திசை மாநாட்டில் சேவியர் தனிநாயகம் அடிகளும் வ.ஐ. சுப்பிரமணியமும் உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கான திட்டத்தை முன்வைத்தனர். இதன் விளைவாக 1966 -ல் கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. ஐரோப்பிய, அமெரிக்க பல்கலைக்கழகங்களில் தமிழ் குறித்த புரிதல், இம்மாநாடுகள் மூலம் ஏற்பட்டது.

உலகிலுள்ள தமிழாராய்ச்சிக்கான மையமாக இயங்கும் ஓர் அமைப்பாக 1968-ல் அண்ணாத்துரை முதல்வராக இருந்தபோது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது. யுனெஸ்கோ அங்கீகாரத்தோடு, தன்னாட்சியாக அந்நிறுவனம் செயல்பட அடிப்படை வரைவுகளை உருவாக்குவதில் வ.ஐ.சுப்ரமணியம் பெரும்பங்கு வகித்தார். 1968 முதல் 1980 வரை அதன் செயலராகவும் பணியாற்றினார். இந்நிறுவனம் உலகத்தமிழ் மாநாடுகளை நடத்தி வருகிறது.

தமிழ்வழி அறிவியல் கல்விக்கான போராட்டம்

கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது ஜனவர் 19, 1999-ல் அடுத்த கல்வியாண்டு முதல் (1999-2000) அறிவியல் பாடங்களை தமிழில் கற்பிக்க அரசு ஆணை பிறப்பித்தது. தனியார் பள்ளிகளின் நிர்வாகிகளும் பெற்றோர்களும் ஆணையை எதிர்த்து வழக்கிட்டு வென்றனர். கருணாநிதி அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தபோது வ.அய். சுப்பிரமணியம் அம்முறையீட்டில் தன்னை அதில் இணைத்துக் கொண்டு தமிழ் கல்விமொழியாக இருக்கவேண்டியதன் காரணங்களை முன்வைத்தார்.

விருதுகள், பரிசுகள்

- **தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறைப் பரிசு (2007, மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம் வகைப்பாட்டில்)**
- **கௌரவ முனைவர் பட்டம் (மொழியியல் துறைப் பங்களிப்புகளுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தமிழ் பல்கலைக்கழகம்)**

மறைவு

வ.ஐ. சுப்பிரமணியம் ஜூன் 29, 2009 அன்று திருவனந்தபுரத்தில் காலமானார்.

வ. ஐ. சுப்பிரமணியத்தின் ஆளுமையின் சாயலையுடைய நாயகனைக் கொண்டு பிரபஞ்சன் *காகித மனிதர்கள்* எனும் புதினத்தை எழுதினார்.

மதிப்பீடு


வ.ஐ. சுப்பிரமணியம் மொழியியலிலும், தமிழியலிலும் அறிவுபூர்வமான ஆய்வுமுறைகளப் பின்பற்றிய முன்னோடியாக அறியப்படுகிறார். திராவிட மொழியியல் நிறுவனத்தின் மூலமாக அவர் வெளியிட்ட பல்வேறு ஆராய்ச்சி நூல்கள் மிக முக்கியமானவை. கீழைத்தேய மாநாடுகளில் தமிழின் தொன்மைக்கும் விரிவுக்கும் இடமில்லாமையை கண்டு தமிழுக்காக தனி மாநாட்டின் அவசியத்தை வலியுறுத்தி உலகத்தமிழ் மாநாடுகள் நடக்க முக்கியக் காரணமானவர்களில் ஒருவர்.

துணைவேந்தராக தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தில் குறிப்பிட்ட தேசிய இனத்தின் மொழி, கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு சார்ந்த கூறுகளை தர்க்கப்பூர்வமாக புரிந்து கொள்ளும் கல்வி மற்றும் ஆய்வு முறையின் நிர்வாகக் கட்டமைப்பு தமிழ்க்கல்வித்துறைக்கு அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பு.

ஒரு மொழிக் குடும்பத்திற்காக இந்தியாவில் செயல்படும் ஒரே பல்கலைக்கழகமான குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம் உருவாகக் காரணமாக இருந்தார். தென்னக இலக்கியங்களை ஒட்டுமொத்தமாக திராவிட இலக்கியமாக அணுகும் அவரது ஆய்வு முறையைக் குறித்து "எங்களூர் பேரறிஞரான வ.ஐ.சுப்ரமணியம் அவர்கள் குப்பம் திராவிடப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக அமர்ந்து நடத்தி நெடுந்தொலைவு சென்ற ஆய்வுமுறை அது. இன்றைய தமிழாய்வில் குப்பம் திராவிடப் பல்கலையின் திராவிடவியல் ஆய்வுநூல்களே மிகப்பெரிய சாதனைகள்" என்றும், "வ.ஐ. சுப்ரமணியம் அவர்களின் ஆழமான தமிழ்ப்பற்றுதான் தமிழாய்வுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணிக்கச் செய்தது. ஆனால் வ.ஐ.சுப்ரமணியம் அந்த தமிழ்ப்பற்று தன் ஆய்வுக்கு குறுக்கே வர அனுமதித்தவரல்ல. இந்த நடுநிலைமை தமிழாய்வில் என்றும் தேவையாக இருக்கக் கூடிய ஒன்று. தன் மாணவர்களில் அந்த நோக்கை வலியுறுத்தி பயிற்றுவித்தது தமிழில் ஒரு மரபை உருவாக்கியது" என்றும் ஜெயமோகன் குறிப்பிடுகிறார்.

(😊)(😊)(😊) @@@ (😊)(😊)(😊)





வ.அய்.சுப்ரமணியம்

மொழியியல் அறிஞர்

மொழியியல் அறிஞர்













NSR100 கல்வி அறக்கட்டளை

மொழியியல் அறிஞர் பேராசிரியர்

வ.அய்.சுப்பிரமணியம்

[HTTPS://WWW.KEETRU.COM/INDEX.PHP/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/320-2009-08-27-08-38-34](https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/320-2009-08-27-08-38-34)

முனைவர் இராம.சுந்தரம்

வெளியிடப்பட்டது: 27 ஆகஸ்ட் 2009

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

திராவிட மொழி, இலக்கியம், பண்பாடு முதலியவற்றை மையப்படுத்திய திராவிடவியல் ஆய்வைத் மது உயிர் மூச்சாகக் கொண்டு தம் வாணாள் முழுதும் பாடுபட்டவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் மூதறிஞர் வ.அய்.சுப்பிரமணியனார். துணைவேந்தராகும் முன்பே, தமிழியல், மொழியியல் ஆய்வுகளில் ஈடுபட்டு, பல அறிஞர்களை உருவாக்கியவர்.

அவரது திட்டமிடும் பாங்கும், செயல் திறனும் அவரது தலைமையில் செயல்பட்ட சில நிறுவனங்கள் நன்கு வளர்ச்சியுற்றுப் பெருமையுறக் காரணமாயின. தமிழ்ப் பல்கலைக்கழகமும் அவற்றுள் ஒன்றாகும். 1981 முதல் 1986 வரையுள்ள ஐந்தாண்டு காலம் அவர் யார்க்கும் அஞ்சாது, குறிக்கோளை விட்டுத்தராது, துணிவோடும், நேர்மையோடும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக செயல்பட்டார். பன்னாட்டுத் தமிழறிஞர்கள், மாணவர்களை மட்டுமின்றி, பிறமொழியினரையும் பல்கலைக்கழகம் தன்பால் ஈர்க்க அவரது செயல்முறை உதவியது. போலந்து, ஜெர்மனி, மலேசியா, சீனா, மொரீசியஸ் எனப் பல நாடுகளைச் சார்ந்தவர்களும், இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து தமிழ் கற்கவும், ஆய்வு மேற்கொள்ளவும் முனைந்தனர். இவ்வாறு தமிழ்ப் பல்கலைக்கழககத்துக்கு ஒரு உலகளாவிய பெருமையை பெற்றுத் தந்த அந்தப் பெருமகன் நம்மை எல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி 29.06.2009 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பிறமொழி அறிவும் தேவை என்பதைக் கருத்தில் கொண்ட அவர் பிராகிருதம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, மலாய் ஆகிய மொழிகளைக் கற்க மாணவர்களை உரிய இடங்களுக்குச் சென்று பயிற்சி பெறச் செயதார். அவர்களுள் சிலர் இன்று நல்ல மொழி பெயர்ப்பாளர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் பிற நாட்டிலிருந்தும் வந்து தமிழ் கற்றவர்கள் தமிழ் இலக்கியங்களை அவர்தம் மொழிகளில் மொழிபெயர்த்ததோடு, இருமொழி அகராதிகளையும் உருவாக்கினர். பல ஆண்டுகளாகச் செயலற்றுக் கிடந்த தமிழ்ப் பேரகராதி, கலைக் களஞ்சியப்

பணிகள், இவரது முயற்சியால் முழுவீச்சில் செயல்படத் தொடங்கின. தகுதியானவர்களை அமர்த்தி இத்திட்டங்களைச் செயல்படுத்திய காரணத்தால் இன்று பல்கலைக்கழகம் மூலம் பெருஞ்சொல்லகராதிகள் (5 தொகுதிகள்) 2, கலைக்களஞ்சிங்கள் (30 தொகுதிகள்), சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்(3), பல துறைசார் கலைச் சொல்லகராதிகள்(12) வெளிவந்து பலருக்கும் பயன்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக ஆசிரியர்கள், ஆய்வாளர்களின் தரமான படைப்புகளும் வெளிவந்து, தமிழியல் ஆய்வின் பரப்பை விரிவுபடுத்தியுள்ளன. பிறமொழி யாளர்களும் தமிழின் சிறப்பை உணரும் வகையில் தமிழிலக்கியங்களும் மொழியாக்கம் செய்யப்பட்டு ‘தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் நிலை’ ஏற்பட்டுள்ளது. கிடைத்தற்கரிய பல அரிய தமிழ் நூல்களைப் பதிப்பிக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தினார். அயல்நாடுகளில் வாழ் தமிழர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் பண்பாட்டுத் தொடர் வகுப்புகளைத் தொடங்கி வைத்தார்.

பல்துறை அறிவு வளர்ச்சிக்குத் தாய்மொழிவழிக் கல்வியே முதன்மையானது என்பதை ஏற்று, பொறியியல், மருத்துவம், இரண்டையும் தமிழ் வழிக் கற்பிக்கும் திட்டத்தில், அதற்கான பாடநூல்களை உருவாக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் (9 மாதம் முதல் ஓராண்டு வரை) 27 நூல்கள் (பொறியியல் 13, மருத்துவம் 14) பெறப்பட்டு, அவை தொடர்ச்சியாக வெளிவரத் தொடங்கின. பொறியியலைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலேயே பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து கற்பிப்பிப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. அதேபோல், தஞ்சை மருத்துவக்கல்லூரியுடன் சேர்ந்து மருத்துவப் படிப்பைத் தமிழ் வழிச் செயல்படுத்தும் திட்டமும் இருந்தது. பல்வேறு காரணங்களால் இவை இரண்டும் செயல்படுவதில் தயக்கம் ஏற்பட்டது. இத்திட்டத்தின் மூலம், தமிழில் இத்துறைகளுக்கான நூல்களை ஆங்கில நூல்களின் தரத்துக்கிணையாகத் தமிழில் எழுதித்தரும் வல்லுநர்கள் உள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டது. ‘தமிழில் எதையும் சொல்ல முடியும்’ என்ற இவரது கருத்து. இதன் மூலம் வலுப்பெற்றது. தமிழியல் ஆய்வு பரவலாக்கப்படும் நோக்கிலும், தக்கவர்களை இனங்காணும் விருப்பிலும் இவர் பல கருத்தரங்குகள் நடத்தினார். எந்தத் துணைவேந்தரும் மேற்கொள்ளாத ஒரு நடைமுறையை இவர் மேற்கொண்டார். கருத்தரங்கின் தொடக்கம் முதல் இறுதிவரை, பேராளர்களோ ஒரு பேராளராக அமர்ந்து, கருத்தரங்கில் கவனம் செலுத்தி, ‘இதனை இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்’ என்பதற்கேற்ப, தகுதியானவர்களைத் தெரிவு செய்து,

அவர்களைப் பணியமர்த்தி, ஆய்வை மேற்கொள்ளச் செய்வதுதான் அந்த நடைமுறை. கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் திட்டத்தையும் செயல்படுத்தினார்.

நாட்டுப்புறக் கலைகளைப் பேணிக்காக்கும் திட்டத்தின் அடிப்படையில் கரகாட்டம், தப்பாட்டம் முதலியவற்றை நாடகத்துறை வழி வளர்த்தெடுக்கும் பணியும் நடைபெற்றது. இன்று தப்பாட்டம் திரையுலகிலும், மேலை நாடுகளிலும் அரங்கேற்றப்படக் காண்கிறோம். இதற்கு அடித்தளமிட்ட பெருமகன் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர்தான்.

திராவிடவியல் பணிகள்

மூதறிஞர் வ.அய்.சுப்பிரமணியனாருக்குத் தமிழ் மீது எவ்வளவு காதல் உண்டோ அதற்குச் சற்றும் குறையாத அளவு பிற திராவிட மொழிகளிடத்தும் உண்டு. அவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குத் துணை வேந்தராக வரும்முன் கேரளப் பல்கலைக்கழக மொழியியல் துறைத்தலைவராக இருந்தார். திராவிட மொழியியல் ஆய்வை வளர்த்தெடுத்தார். இலக்கிய இலக்கண ஆய்வோடு அமையாது, கிளைமொழி ஆய்விலும் கருத்தூன்றி, பல ஆயுவேடுகள் வெளிவரத் துணை நின்றார். இதன் விளைவாக 1971இல் திராவிட மொழியியல் கழகம் (Dravidian LanguisticsAssociation) தோன்றியது. இக்கழகத்தின் சார்பாக, ஆண்டுதோறும் இந்தியாவின் பல மாநிலங்களிலும், கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. 2009 ஜூன் மாதம் திருவனந்தபுரத்தில் நடந்த கருத்தரங்கு 37வது கருத்தரங்காகும். எவ்வித இடையூறுமின்றி, ஆண்டுதோறும் தொடர்ந்து கருத்தரங்குகளை நடத்தும் ஒரு சில அமைப்புகளில் திராவிட மொழியியல் கழகமும் ஒன்று என்பதும், அதற்கான உந்து சக்தியாக இருந்தவர் பேராசிரியர் என்பதும் உறுதி. திராவிட மொழியியல் ஆய்வை உலக அளவில் கொண்டு செல்லும் நோக்கில் 1972இல் பன்னாட்டுத் திராவிட மொழியியல் இதழ்(International Journal of Dravidian Linguistics) ஒன்று இவரால் தொடங்கப்பெற்றது. ஆண்டுக்கு இருமுறை வெளிவரும் இவ்விதழ் இன்றுவரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

திராவிட மொழியியல் கழகம் தொடக்கம் முதல் இன்று வரை நூல் வெளியிடும் பணியிலும் ஈடுபட்டு நூற்றுக்கும் மேலான நூல்களை வெளியிட்டுள்ளது. திராவிடக் களஞ்சியம் -3 தொகுதிகள் (Dravidian Encylopaedia –3 Vol), திராவிடப் பழங்குடி மக்கள் களஞ்சியம் - 3 தொகுதிகள் (Encyclopaedia of

Dravidian Tribes – 3 Vols), மேற்கு வங்காளம் - ஒரு கையோடு – 2 தொகுதிகள் (A handbook of West Bengal 2 Vols), தொல்காப்பிய மூலபாட வேறுபாடுகள் (Textual vanation of Tolkappiyam), தொல்காப்பியச் சொல்லடைவு (Index of Tolkappiyam), தென்னிந்தியாவில் சமணம் (Jainism of South India), தெலுங்கு இலக்கணக் கோட்பாடுகள் (Theories of Telugu Grammer), கிரந்த எழுத்துக்கள் (The Grantha Script) என்பன அக்கழக வெளியீடுகளில் சிலவாகும். சமஸ்கிருதம், பிராமி மொழிகளிலுள்ள இலக்கணங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது போல, திராவிட மொழிகள் சிலவற்றின் இலக்கணமும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களைத் தோற்றுவிக்கும்முன் இவர் கேரள பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பேரா. வையாபுரிப்பிள்ளையின் கீழ் ஆய்வுப் பணியையும், அடுத்து ஆசிரியப் பணியையும் தொடங்கினார். துறைத் தலைமைப் பொறுப்பு ஏற்றதும், வையாப்புரிப்பிள்ளையின் திட்டமான சங்க இலக்கியச் சொல்லடைவு, சங்க இலக்கிய ஆய்வு ஆகியவற்றில் கருத்தூன்றி, தக்க மாணவர்களைக் கொண்டு அத்திட்டத்தைச் செயல்படுத்தலானார். புறநானூறு சொல்லடைவு இவரது ஆக்கம் ஆகும். தொடர்ந்து இவரது மாணவர்கள் எட்டுத் தொகை, பத்துப்பாட்டுக்கான சொல்லடைவுகளைத் தயாரித்து, அவற்றை ஆதாரமாகக் கொண்டு, இந்த இலக்கியங்களின் மொழிக் கட்டமைப்பை ஆய்ந்து முனைவர் பட்டம் பெற்றனர். அவற்றுள் சில ஏற்கனவே கேரளப் பல்கலைக்கழகம் மூலம் வெளிவந்துள்ளன. தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்த சிலர், மொழியியலில் முனைவர்பட்டம் (இந்தியானா பல்கலைக்கழகம், அமெரிக்கா) பெற்றிருந்ததால் இரண்டையும் இணைத்து ஆய்வுத் தளத்தை விரிவுபடுத்தினார். இதன் பலனாக, புளூம்ஃபீல்டின் அமைப்பியல் மொழிக் கோட்பாடுகளோடு சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடு, பைக்கின் டாக்மிமிக் கோட்பாடு, ஹெம்சிலேவின் கிளாஸமாட்டிக் கோட்பாடு என அன்று புதிதாகக் களமிறங்கிய பல மொழியியல் கோட்பாடுகளைத் தமிழுக்கும் பொருத்திப் பார்த்து அதன் வன்மை மென்மைகளைக் காணச் செய்தார். 1960களில் இவ்வகை ஆய்வு வேறு பல்கலைக்கழகங்களில் விரிவான அளவில் இடம் பெறவில்லை. மொழியியலில் ஆழக்கால் பதித்தவர் என்பதற்கு இப்பன்முறை ஆய்வு ஒரு சான்றாகும்.

பிற பணிகள்

இவரது கல்வி சார் நிறுவனப் பணியின் அடுத்தக் கட்டம் இறுதிக்கட்டம் ஆந்திராவிலுள்ள குப்பத்தில் தோற்றுவிக்கப்பட்ட திராவிடப் பல்கலைக்கழகமாம்.

அதன் இணை வேந்தராக அதன் தோற்றம் முதல் சில ஆண்டுகள்(1997-2001) பணியாற்றினார். திராவிடம் என்ற சொல்லுக்கேற்ப தமிழகம், ஆந்திரம், கருநாடகம் சார் பகுதியிலுள்ள குப்பத்தைத் தேர்ந்தெடுத்தார். பல்வேறு கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. நல்ல நூலகம் ஒன்று அமைக்கப்பெற்றது. பல்கலைக்கழகத்துக்கான பொலிவுடன் பல கட்டடங்களையும் உருவாக்கினார். இன்றும் அப்பல்கலைக்கழகம் செவ்வனே செயல்பட்டு வருவதற்குக் காரணம் இவரது திட்டவரைவு தான்.

இவ்வாறு பன்முக நோக்கில் யாவரும் போற்றும் வண்ணம் செயல்பட்ட இவரது வாழ்வியல் முறை பற்றிய சில குறிப்புகள்:

நாகர்கோவிலுள்ள வடசேரியில் 18.02.1926 இல் அய்யம்பெருமாள் - சிவகாமி இவர்களுக்கு மூத்த மகனாகப் பிறந்தார். 83 ஆண்டுகள் வாழ்ந்து தாம் மேற்கொண்ட பணிகளைக் குறைவேதுமின்றிச் செயலாற்றிய மனநிறைவோடு தமது 84வது வயதில் 29.06.2009 அன்று நீள்துயிலில் ஆழ்ந்தார். அவர் துயின்றார். ஆனால், அவரது வழிகாட்டுதலில் இன்று வரை பணியாற்றி வரும் பலரும் துயிலின்றித் தவிக்கின்றனர். வடசேரி அய்யம்பெருமாள் சுப்பிரமணியம் என்பது தமிழில் வ.அய்.சு. என்றும், ஆங்கிலத்தில் VIS என்றும் சுருக்கமாகக் கூறப்படும். அவர் மாணவர் ஒருவர் (Very Important Subramoniam) என்று மிகப்பொருத்தமாக அழைத்து, ஒரு கட்டுரையும் எழுதியுள்ளார். இவரது குடும்பம் பெரியது பொருளாதார நெருக்கடிக்குட்பட்டது. இதைப் புரிந்து கொண்டதால், அதற்கேற்பத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். மனைவி பெயர் இரத்தினம். மக்கள் நால்வர். மூத்தவர்கள் இருவரும் இவரை முந்திக் கொண்டனர். இளைய மகனும், மகளும் உள்ளனர். வடசேரியிலுள்ள எஸ்.எம். ஆர்.வி. பள்ளியிலும் (1941), நாகர்கோவில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரியிலும் (1943) படித்த பின், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் (1946) பட்டம் பெற்றார். அமெரிக்காவிலுள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் மொழியியலறிஞர் ஹவுஸ் ஹோல்டர் (House Holder) நெறிப்படுத்துகையில் மொழியியலில் முனைவர் பட்டம் (1957) பெற்றார். இந்த இடைப்பட்ட காலத்தே (1946-57) திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும், புது தில்லியில் அகில இந்திய வானொலி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராகவும், கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

1958-67 முதல் அப்பல்கலைக்கழகத்தில் தமிழ், மொழியியல் துறைகளில் பேராசிரியராகப் பணியாற்றி, பின்னர் 1967 முதல் மொழியியல் துறைத்தலைவராகவும், பேராசிரி யராகவும் பணி தொடர்ந்தார். 1981-86 காலகட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தரானார். 1997-2001 குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர், இடைப்பட்ட காலங்களில் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளியின் மதிப்புறு இயக்குநராக இருந்து தொண்டாற்றினார். 2001-2009 வரை இந்த இயக்குநர் பணி தொடர்ந்து நடைபெற்றது. பேராசிரியர் பொருளா தார நெருக்கடிக்காளான குடும்பத்தில் பிறந்தவர். சிலகாலம் திருவனந்தபுரத்தில் மாமனார் வீட்டில் வசித்தவர். அங்கும் சில பொருளாதாரச் சிக்கல் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. இது இவரது வாழ்வில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. அதனால் பொருளாதார வசதி இல்லாத மாணவர்களுக்கு தக்க உதவி செய்து அவர்கள் கல்விப் பணி தொடர வழி வகுத்தார். மாணவர்கள் என்றில்லாது மற்றவர்களுக்கும் அவரது கொடைக்கரம் நீண்டது. தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்தகாலத்தில், சில பதிப்பகத்தார் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான போது, உரிய விலை கொடுத்து அவர்களது நூல்களை நூலகத்துக்கு வாங்கினார். இது பின்னரும் தொடர்ந்தது.

இவர் அடக்கமானவர். இறுக்கமானவர். யாரோடும் நெருங்கி உறவாடாதவர். துணிச்சலும் நேர்மையும் கொண்டவர். தமக்குச் சரியென்று பட்டதை எப்பொழுதும் எவருக்காகவும் விட்டுக் கொடுக்காதவர் என இவரது பண்பு நலன் குறித்துப் பரவலாகப் பேசப்படுவது உண்டு. விட்டுக் கொடுத்தல், நெருங்கிப் பழகுதல் முதலியவை தமது குறிக்கோளை நிறைவேற்றத் தடையாகிவிடுமோ என்கிற எண்ணத்தால் அவற்றைத் தவிர்த்தார். வெளித்தோற்றத்துக்குக் கெடுபிடி யாளராகத் தோன்றினாலும், உரிய சமயங்களில் தமது மனநெகிழ்வை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தத் தயங்கமாட்டார். பல துறைசார் ஆய்வுகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் 150க்குக் குறையாத கட்டுரைகள். சில மதிப்புரைகளும் எழுதியுள்ளார். 215 நூல்கள் வெளியிட்டுள்ளார். Index of Puranaanuuru, Survey of Malayalam Dialects முதலியன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. இவரது ஆய்வின் மையம் திராவிடவியலாகும். இவரது மறைவுக்குப் பின் இவரைப் பற்றி எழுதிய ஒரு

மலையாள அறிஞர் "இவரது உடலும் உயிரும் திராவிடவியலே" என்று குறிப்பிட்டார்.


(😊)(😊)(😊) @@@@@ (😊)(😊)(😊)











வ.அய்.சுப்ரமணியம்

வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர்

மொழியியல் அறிஞர்













NSR100 கல்வி அறக்கட்டளை

வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர்

வ.அய்.சுப்பிரமணியம்

https://www.keetru.com/index.php?option=com_content&view=article&id=527&Itemid=139

வீ.அரசு

வெளியிடப்பட்டது: 19 செப்டம்பர் 2009

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் (1926 -2009) 29. 06.2009 அன்று மறைந்தார். அவரது பூதஉடல் மறைவு நிகழ்ந்தபோதும், கால காலத்திற்கு மறையாமல் இருக்கும் அவரது செயல்பாடுகள் குறித்து மீள நினைப்பதற்கு இதுவே ஏற்ற தருணம். அவரைக் குறித்துப் பல பரிமாணங்கல் உரையாடுவதற்கான ஏதுக்கள் இருந்தாலும், அவரது நிறுவன உருவாக்கச் செயல்பாடுகளை மட்டும் நினைவுகூறலாம்.

பிரித்தானியர்கள், பல்வேறு சமஸ்தானங்களையும் இணைத்து இந்தியாவை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் உருவாக்கினார்கள். அவ்விதம் உருவான சூழலில் பல நிறுவனங்களை உருவாக்கினார்கள். மானிடவியல்துறை , கல்வெட்டியல்துறை, தொல்லியல்துறை, மொழி கணக்கெடுப்புத்துறை ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை. இந்நிறுவனங்கன் மூலமே இந்திய வரலாறு, குறிப்பாக தொல்பழம் வரலாறு, இந்தியாவில் வாழும் தேசிய இனங்கள், இந்திய மொழிகள் ஆகியன பலவற்றைக் குறித்த பல்வேறு விவரங்களைப் பெற முடிந்தது. இவைகளைக் கொண்டே மேலைத்தேயத்திற்கு இணையாக கீழைத்தேயம் என்னும் கருத்தாக்கத்தைக் கட்டமுடிந்தது. இந்தியவியல் எனும் கருத்தாக்கமும் உருவானது. பிரித்தானியர்கள் உருவாக்கிய இவ்வகையான கருத்தாக்கத்தின் தொடர்ச்சியாக, பின்னர் ‘திராவிடஇயல்’ எனும் கருத்தாக்கம் உருவானது. பேரா. வ.அய். சுப்பிரமணியம், தாம் முன்னின்று உருவாக்கியன நிறுவனங்கன் மூலம் திராவிடஇயல் கருத்தாக்கத்திற்கு எவ்வகையில் வளம் சேர்த்தார் என்ற உரையாடல், அவர் உருவாக்கிய நிறுவனங்கன் தன்மையைப் புரிந்துகொள்ள உதவும்.

இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்திலிருந்து திராவிட மொழிக்குடும்பம் வேறுபட்டது என்ற கருத்துநிலை கால்டுவெல் மூலம் உறுதிப்பட்டது. (1856) அக்கருத்துநிலை 1940கல் உலகம் முழுவதும் வளர்ச்சி பெறத் தொடங்கிய மொழியியல் ஆய்வால் மேலும் உறுதியானது. மொழி ஒப்பிட்டு ஆய்வு என்பது அறிவியல்பூர்வமான தர்க்கமாக, மொழியியல்துறை உருப்பெற்றது. இந்தச் சூழலில் பிரித்தானியர்களால் வட்டாரமொழிகள் சார்ந்த ஆய்வுகளும் உருவாயின. இந்தப் பின்புலத்தில் பேரா. தனிநாயகம் அடிகள், தூத்துக்குடியைச் சேர்ந்த புரவலர்கன் துணையோடு, ‘Tamil Culture’ எனும் ஆங்கில இதழை 1952 முதல் கொண்டுவரத் தொடங்கினார். இவ்விதழில் திராவிடமொழிகன் இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாடு குறித்த கட்டுரைகள் வெவரத் தொடங்கின. குறிப்பாக தமிழில் புதிதாக அங்கீகாரம் பெற்றுவந்த சங்க இலக்கியம், தொல்காப்பியம் மற்றும் சிந்துசமவெளி அகழ்வாய்வு ஆகியவை குறித்த கட்டுரைகள் வெளிப்பட்டன.

1964 இல் அகில உலக கீழ்த்திசை மாநாடு டெல்லியில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பங்கேற்ற தனிநாயகம் அடிகளும் வ.அய். சுப்பிரமணியம் அவர்களும் சுற்றறிக்கை ஒன்றை மாநாட்டுப் பங்கேற்பாளர்கடையே சுற்றுக்கு விட்டார்கள். இதன் விளைவாக அகில உலகத் தமிழ் ஆய்வுக்கழகம் உருவானது. இவ்வமைப்புதான் உலகத் தமிழ்மாநாடுகளை நடத்தியது. இம்மாநாடு தமிழகத்தில் நடைபெற்ற போதெல்லாம் ஆளும் கட்சிகள் தங்களது பிரச்சாரக் கருவியாக அம்மாநாடுகளை கட்டமைத்தன. அதில் பல நல்ல விளைவுகளும் ஏற்பட்டன. இம்மாநாடுகள் மூலம் வெளிவந்த ஆய்வுகள், தமிழியல் ஆய்வை உலகப் பரப்பிற்கு எடுத்துச்சென்றது. இதற்கான திட்டமிடுதலில், இவ்வமைப்பின் செயலாளராக இருந்த (1967 -1980) பேரா. வ.அய். சுப்பிரமணியம் அவர்களுக்கு முதன்மையான இடமுண்டு. ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பல்கலைக்கழகங்கல் தமிழ் குறித்த புரிதல், இம்மாநாடுகள் மூலமே சாத்தியமாயின. இம்மாநாடுகல் பங்கேற்ற ஐரோப்பிய, அமெரிக்கப் பேராசிரியர்கன் பட்டியல் இதனை உறுதிப்படுத்தும். பேரா. கமில்சுவலபில், ஜான் பிலியோசா, எமனோ, ஆஷர், டி. பர்ரோ, எம்.எஸ். ஆந்திரனோவ் ஆகிய பலர். இப்பட்டியல் மிக நீளமானது. ஆக, உலக அளவில் தமிழியல் ஆய்வு பல பரிமாணங்கல் புரிந்து கொள்ள பேராசிரியரின்

பங்களிப்பு எவ்வகையில் இருந்தது என்பதை உலகத்தமிழ் மாநாட்டு ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

பேரா. வ.அய். சுப்பிரமணிம், கேரளப் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறை (1965) உருவாக்கினார். இக்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் விரிவான ஆய்வுகள் உருப்பெற்றிருந்தன. இச்சூழலைப் பயன்படுத்தி 1971 இல் திராவிட மொழியியற் கழகத்தை கேரள அரசின் துணையோடு திருவனந்தபுரத்தில் உருவாக்கினார். அந்த ஆண்டே திராவிட மொழிகள் ஆய்விற்கான இதழையும் கொண்டுவரத் தொடங்கினார். International Journal of Dravidian Lingustics எனும் இந்த ஆய்வு இதழ் திராவிட மொழியியல் கழகத்தின் வெளியீடாக இன்றும் வந்து கொண்டிருக்கிறது. இவ்விதழ், திராவிட மொழியியல் ஆய்வை உலகத்தரத்திற்கு முன்னெடுத்தது. திராவிட மொழியியல் கழகம் மற்றும் அவ்வமைப்பின் இதழ் வெளியீடு ஆகியவற்றின் தொடர்ச்சியாக 'பன்னாட்டுத் திராவிட மொழியியல்' பள்ளியை 1977 இல் திருவனந்தபுரத்தில் உருவாக்கினார்.

அரபி பெருங்கடலின் ஓரத்தில் கடலைப்போன்ற அகன்ற இடத்தில் அந்நிறுவனத்தை அவர் உருவாக்கியிருப்பதை நாம் காணமுடிகிறது. இவ்விதம் 1960கல் உலக அளவில் தமிழியியல் ஆய்விற்கு ஏற்பட்ட வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி, கேரளாவில் அவர் உருவாகியுள்ள திராவிடமொழிகளுக்கான ஆய்வு நிறுவனம் ஆண்டுதோறும் மாநாடுகளை நடத்தி, திராவிடமொழி ஆய்வை வளப்படுத்தியது. அம் மாநாட்டு கட்டுரைகளை தொடக்கத்தில் பேராசிரியரே பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

அரசு சார்ந்த நிறுவனங்கன் செயல்பாடுகள், எல்லாத் தருணங்களிலும் சிறப்பாக இருப்பதில்லை. அதன் தலைமையைப் பொறுத்தே அது அமையும். தன்னாட்சித் தன்மையுடன் (autonomous) உருவாக்கப்படும் நிறுவனங்கள், சாதனைகள் செய்திருப்பதை நாம் காணமுடிகிறது. இப்பின்புலத்தில்தான், தன்னாட்சி நிறுவனங்களை உருவாக்குவதில் பேராசிரியர் அக்கறை காட்டினார். அவைகளுக்கு அரசாங்கம் உதவவேண்டும் என்றும் கருதினார். 1968 இல் நடைபெற்ற உலகத் தமிழ்மாநாட்டின் மூலம் கிடைத்த தொகையைக் கொண்டு, சி.என்.ஏ. அவர்களால்

உருவாக்கப்பட்டது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். யுனெஸ்கோ அங்கீகாரத்தோடு, தன்னாட்சியாக அந்நிறுவனம் செயல்பட அடிப்படை வரைவுகளை உருவாக்கியதில் பேராசிரியருக்கும் பங்குண்டு.


1981 இல் பேராசிரியர் புதிதாக உருவாக்கப்பட்ட தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். இவருக்கிருந்த நிறுவன உருவாக்க ஆளுமைத் திறன்களை சோதனைப்படுத்தும் கூடமாக தமிழ்ப் பல்கலைக்கழகத்தைக் கட்டமைத்தார். கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் என்று பல்துறை சார்ந்த ஆய்வுகளுக்கான புலங்களை உருவாக்கினார். திட்டப்பணிகள், மையங்கள் என்று தனித்தும் உருவாக்கினார். கலைப்புலத்தின் மூலம் சிற்பம், இசை, நாடகம் ஆகிய துறைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு வழிகண்டார். சுவடிப்புலத்தில் ஓலைச்சுவடி, அரிய கையெழுத்துச் சுவடிகள், கல்வெட்டு மற்றும் தொல்லியல் நீரகழாய்வு மையம் ஆகியவற்றை உருவாக்கினார்.

வளர் தமிழ்ப்புலத்தில் அயல்நாட்டு தமிழ்க்கல்வி, மொழிபெயர்ப்பு, அகராதியியல், சமூக அறிவியல், அறிவியல் மற்றும் தமிழ் வளர்ச்சி ஆகிய பிரிவுகளை ஏற்படுத்தினார். மொழிப்புலத்தில், இலக்கியம், மொழியியல், தத்துவமையம், பழங்குடி மக்கள் ஆய்வுமையம், நாட்டுப்புறவியல் துறை, இந்திய மொழிகள் பள் ஆகிய பிரிவுகளை உருவாக்கினார். அறிவியல் புலத்தில் சித்த மருத்துவம், தொல் அறிவியல், நில அறிவியல், கணிப்பொறி அறிவியல், கட்டடக்கலை ஆகியவற்றை ஏற்படுத்தினார். இவ்வகையில், குறிப்பிட்ட தேசிய இனத்தின் மொழி, கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு சார்ந்த கூறுகளை தர்க்கப்பூர்வமாக புரிந்து கொள்ளும் படிப்பு மற்றும் ஆய்வை கட்டமைப்பதாக பேராசிரியரின் இவ்வகையான நிறுவன உருவாக்கமுறை அமைந்துள்ளது. ஆழமான பார்வையைக் கொண்டதாகவும் உள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழக அமைப்பு சார்ந்து தமிழியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுமானால், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் செயல்படும் பல்கலைக்கழக ஆய்வுகளுக்கு இணையான ஆய்வை நாம் முன்னெடுக்க முடியும். இதற்கான கால்கோள் அவரது காலத்தில் (1981-86) அப்பல்கலைக்கழகத்தில் இடப்பட்டது.

பேராசிரியர் தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாள மொழிகள் பேசப்படும் நிலப்பகுதி ஒன்றை தேர்வு செய்தார். அதுவே ஆந்திராவில் உள்ள குப்பம் ஆகும். 1997இல் அங்கு திராவிடப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். நான்கு மொழிகள் இணைந்த ஆய்வை மேற்கொள்ளும் பல்கலைக்கழகமாக அதனைக் கட்டமைத்தார். சில ஆண்டுகள் இணைவேந்தராக இருந்துவிட்டு, பின்னர் அதிலிருந்து விலகிக் கொண்டார். அவரது நிறைவேறாத கனவாக குப்பம் பல்கலைக்கழகம் இருக்கிறது.

புத்தொளிக் காலத்தில் உருவான பல புதிய கூறுகளை உள்வாங்கி ஐரோப்பிய மற்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவர்கன் தொடர்பால் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகல் பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், இந்நிறுவனங்களை பிரித்தானியர் கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டு நமது நிறுவனமாக உருவாக்கம் தேவை நமக்கு உண்டு. இந்தக் கண்ணோட்டம் பேராசிரியருக்கு இருந்தது. உலகத்தில் 'இந்தியவியல்' என்றே அறியப்பட்டது. அதற்குள் ஒரு பகுதியாக அல்லது கீழைத்தேயவியலோடு இணைப்பாக தமிழ் பற்றிய பதிவுகள் இருந்தன. இந்தியவியல் சமசுகிருதத்தை முன்னிருத்தியே புரிந்து கொள்ளப்பட்டது. இதற்கு மாற்றாக திராவிடஇயல் என்பது திராவிட மொழிகளை அடிப்படையாகக் கொண்டது என்பதை கட்டமைக்கும் தேவை ஏற்பட்டது. அதில் முன்னத்தி ஏர் பிடித்த மனிதராக பேராசிரியர் வரலாற்றில் இடம் பெறுகிறார். இந்தியவியல், திராவிடஇயல் என்பவை இணையான தனித்தனி புலமாகப் புரிந்துகொள்ளும் தேவையை பேராசிரியரின் பணிகள் உருவாக்கியுள்ளன. இந்தியவியலிலிருந்து திராவிடஇயலை தனித்தெடுத்து வளர்த்த சூழல் இன்று தமிழியல் ஆய்வு என்ற கட்டமைப்பை நோக்கி வளர்கிறது; அதற்குப் பேராசிரியரின் நிறுவன உருவாக்கம் கைவிளக்காக இருக்கிறது. தமிழ்ச்சமூகம் இவரை என்றும் மறக்காது.

(😊)(😊)(😊) @@@@@ (😊)(😊)(😊)



திராவிடப் பல்கலைக்கழகம்

தோற்றம்

மொழியியல் அறிஞர்













NSR100 கல்வி அறக்கட்டளை

திராவிடப் பல்கலைக்கழக வரலாறு

https://www.keetru.com/index.php/2010-05-24-14-22-59/09/9144-2010-05-27-20-37-18

பேரா.முனைவர் அருணா. இராசகோபால்

வெளியிடப்பட்டது: 28 மே 2010

@@@@@@@@@@@@@@@@

ஒரு பொன்மாலைப்பொழுதில் ஆந்திர அரசின் ஊராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்தின் அரசுச் செயலாளராக இருந்த திருமிகு. காசிப்பாண்டியன் அவர்களின் அலுவலகத்தில் திராவிடப் பல்கலைக்கழக உருவாக்கம் கருக்கொண்டது. இப்பல்கலைக் கழகத்தின் கருத்துரு தமிழக அரசின் மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் 70ஆம் ஆன்டு நிறைவு விழா மலரில் இடம் பெற்றது. தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் பேசப்படும் குப்பம் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னையில் இருந்து முனைவர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்களும், திருமிகு காசிப்பாண்டியன் அவர்களும் தொடர்வண்டிப் பயணம் மேற்கொண்டனர். திராவிடப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கம் மற்றும் செயல்பாடு குறித்து பயணத்தின்போது தொடர்ந்து உரையாடினர்.

குப்பம்- குடிப்பள்ளி - சமண மையம்

குப்பத்தில் 'குடிப்பள்ளி' என்னுமிடம் திராவிட மொழிகள் - பண்பாட்டு ஆர்வலர்கள் இருவரால் ஆய்வு செய்யப்பட்டது. நில அளவைப் பணியைச் செய்தவர் ஒரு மலையாளி. தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழி பேசும் மக்கள் பாறைகள் நிரம்பிய அப்பகுதியில் கூடி நின்றனர். கோலாரின் பொன்மலை/தங்கமலை குப்பத்திலிருந்து காண்போரின் கண்களுக்கு வசப்பட்டது. குடிப்பள்ளி ஒருகாலத்தில் சமண (ஜைன) மையமாக விளங்கிய இடம்.

திராவிடப் பல்கலைக்கழக அமைப்புக்குழு

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கான குழுவில் நீதியரசர் அவுலு சாம்பசிவராவ்

தலைமையராகவும், மேநாள் தமிழ்நாடு அரசின் கல்லூரிக்கல்வி இயக்குநர் திருமிகு கே.மோகனரங்கன், மைசூர் மகாராஜா கல்லூரி மேநாள் முதல்வர் பேரா.எஸ். சாந்தவீரப்பா ஆகியோர் உறுப்பினராகவும் இடம் பெற்றனர். இக்குழுவின் உறுப்பினர்-செயலாளர் முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள். திராவிடப் பல்கலைக்கழகத்தின் சட்ட வரைவு பல்கலைக்கழக நிதி நல்கை ஆணையத்தின் போல்மைச்சட்டம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சட்டம் ஆகியவற்றைப் பின்பற்றி முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

மாண்புமிகு முதல்வரின் விருந்தோம்பல்

திருமிகு. காசிப்பாண்டியன் முயற்சியால் திராவிடப் பல்கலைக்கழகக் குழுவின் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு ஆந்திர முதல்வர் என்.டி.இராமாராவ் இல்லத்தில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. விருந்தோம்பலைச் சிறப்பாகச் செய்த முதல்வர், முனைவர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்களைப் பேச அழைத்தார். முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் நான்கு தென் மாநிலங்களிடையே நிலவும் பண்பாட்டு ஒற்றுமை, கூட்டுறவு குறித்து விளக்கம் அளித்தார். ஆந்திர முதல்வர் திராவிடப்பல்கலைக்கழகத்தின் கருத்துருவை ஏற்றுக் கொண்டு நீதியரசர் திருமிகு அவுலு சாம்பசிவராவ் அவர்களைச் செயல்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டினார். திராவிடப் பல்கலைக்கழத்தின் சட்ட வடிவமைப்புக்குழு செயல்படுத்தும் குழுவாக மாற்றப்பட்டு, மாநிலத் தலைநகர் ஐதராபாத்தில் கூடியது; குழுவின் கருத்துரு கீழ் வருவன:

(அ) திராவிடப் பல்கலைக்கழகத்திற்கான நிதியை நான்கு தென்மாநிலங்களும் நடுவன் அரசும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
(ஆ) உயர்பதவிகள் நான்கு திராவிட மாநிலத்தவர்களால் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.
(இ) கொள்கை வகுப்பது தொடர்பான அமையங்களில் (ஙிஷீபீவீமீS) நான்கு தென்மாநிலத்தவரும் நிதி வழங்கும் அமைப்பும் இடம் பெற வேண்டும்.
(ஈ) ஆந்திர மாநில அரசு 1,090 ஏக்கர் நிலத்தைத் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு விலையின்றி அளிக்கவேண்டும்.

மேற்கண்ட திட்டங்கள் உள்ளடங்கிய கருத்துரு மாண்புமிகு ஆந்திர முதல்வருக்கு அனுப்பி வைக்கப்படடது.

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு வாய்ப்பு கேடுகள்

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கான முயற்சிகள் அடுத்து வந்த ஆந்திராவின் தேர்தல் முடிவுகளால் பின்னடைவு கண்டது. 'தெலுங்கு தேசம்' கட்சி தோல்வியைத் தழுவியது. இந்திய பேராயக்கட்சி ஆட்சிக்கு வந்தது. திருமிகு காசிப்பாண்டியன் இந்திய உணவு இணையத்தில் சென்னையில் பணியேற்றார். ஆந்திர அரசின் செயலாளர்கள் பலர் திராவிடப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு எதிர்ப்பாளர்கள். திருமிகு காசிப்பாண்டியன் இடமாற்றத்தோடு திராவிடப் பல்கலைக்கழகம் 'புதையுண்டு போனது' என்ற உணர்வுகளைக் காட்டினார்கள். இந்தியாவில் ஆந்திர மாநிலம் உள்ளிட்ட ஒவ்வொரு மாநிலத்திலும் அமையவிருந்த சமத்கிருதப் பல்கலைக்கழகம் அமைய ஆர்வம் காட்டினார்கள்.

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு உதவிகள்

திராவிட மொழிஇயல் கழகத்தின் முயற்சியால் திராவிடப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு எதிர்பாராத பகுதியிலிருந்து உதவிகள் வந்தன. பல்கலைக்கழக நிதி நல்கை ஆணையத்தின் துணைத் தலைமையர் திருமிகு இராமசந்திரராவ் அவர்களிடம் திராவிடப் பல்கலைக்கழகம் குறித்து விளக்கப்பட்டது. திருமிகு இராமச்சந்திரராவ் சத்தீஸ்கர் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் மாண்புமிகு அஜித்ஜோகியின் நண்பர். இவர் மத்திய அரசின் நிதி உதவி குறித்து மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சராக விருந்த மாண்புமிகு அர்ஜூன்சிங் அவர்களிடம் எடுத்துரைத் தார். திருவனந்தபுரத்தில் அனைத்து நாடுகள் திராவிட மொழி இயல்கழகம் சார்பில் கட்டப்பட்ட மருத்துவமனை திறப்பு விழாவிற்கு வந்தபோது மாண்புமிகு அர்ஜூன்சிங் அவர்கள் இக்கழகம் தன் பணிகளை வெளிபடுத்த வேண்டும் என்றும் தென்மாநில முதல் அமைச்சர்களுக்கு நிதிஉதவி குறித்து தான் கடிதம் எழுதுவதாகவும் உறுதியளித்தார். திருமிகு காசிப்பாண்டியன் அவர்களின் உறவினர், ஆந்திர மாநிலத்தின் இந்திய ஆட்சிப்பணி அலுவலர் முனைவர் சு.செல்லப்பா அவர்கள் ஐதராபாத்தில் திராவிடப் பல்கலைக் கழகத்தைச் சட்டப்படி பதிவு செய்தார். முனைவர் செல்லப்பா, இந்திய ஆட்சிப்பணித் தேர்வுகளை முதன் முதலாக தமிழில் எழுதி வெற்றி பெற்றவர். 'இந்திர காவியம்' நூலைப்படைத்தவர், தமிழக அரசின் பரிசையும் பெற்றவர்.

திராவிடப் பல்கலைக்கழகத்திற்குப் பகையும் நட்பும்

தில்லியில் கல்வி அமைச்சகத்தில் பணியாற்றிய தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு செயலாளர் திராவிடப் பல்கலக்கழகம் தொடர்பான பணிகளைக் காலதாமதத்திற்கு ஆட்படுத்தினார். திராவிடப் பல்கலைக்கழகத்தின் கருத்துருவை தில்லி பிராமணிய ஆட்சியாளர்கள் கொல்வதற்கு முயன்றனர் என்பது முனைவர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்களின் கருத்து.

திராவிடப் பல்கலைக்கழகத்தின் அமைப்புத் திட்டம் பல்கலைக்கழக நிதிநல்கை ஆணையத்தின் தலைமையர் முனைவர் இராமிரெட்டி அவர்களுக்கு அனுப்பப்பட்டது. முனைவர் இராமிரெட்டி, திருமிகு. இராமச்சந்திரராவின் நண்பர். பல்கலைக்கழக நிதிநல்கை ஆணையத்தின் சார்பில் முனைவர் எம்.வி.பைலி குப்பம் சென்ற பின்னர், திருவனந்தபும் வந்தார். அது சமயம் திருமிகு காசிப்பாண்டியன் கொச்சியில் நிர்வாக தீர்ப்பாயத்தின் உறுப்பினராகப் பணியாற்றி வந்தார்; பல்கலைக்கழக நிதிநல்கை ஆணையக் குழுவின் விவாதங்களில் திருவனந்தபுரத்தில் பங்கு பெற்றார்.

திருமிகு காசிப்பாண்டியன் பிறகு ஆந்திர மாநிலத்தின் தேர்தல் ஆணையராகப் பணி அமர்த்தப்பட்டார். அப்போது ஆந்திர மாநிலத்தின் முதல்வராக இருந்த மாண்புமிகு. ஜனார்த்தன ரெட்டி அவர்களைத் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கான குழு உறுப்பினர்கள் சந்தித்தனர். "திராவிடப் பல்கலைக்கழகம் ஏன் ஆந்திரத்தில் உருவாக்கப்பட வேண்டும்?" என்று முதல்வர் கேள்வி எழுப்பினார். இந்த எதிர்பாராத கேள்விக்கு விடையளித்த முனைவர் வ.ஐ.சுப்பிரமணியம் "ஆந்திரத்தின் அமாராவதி பௌத்த மையமாக விளங்கியது; இங்கிருந்துதான் கீழ்த்திசை நாடுகளுக்கு பௌத்தம் பரவியது," என்று விடையளித்தார். இது திராவிடப் பல்கலைக்கழகம் அமைய நயன்மை விளக்கமானது (யிustவீயீவீநீணீtவீஷீஸீ). இச்சந்திப்பைத் தொடர்ந்து முதல்வர் அலுவகத்திலிருந்து நாளேடுகளுக்கு திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு 1090 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டதாகச் செய்தி அறிவிக்கப்பட்டது. ஆனால் அரசாணை வெளியிடப்படவில்லை.

அடுத்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் திருமிகு என்.டி.இராமராவ்

முதல்வரானார். இதனால் திருமிகு. காசிப்பாண்டியனின் துலக்கம் ஆந்திர அரசு வட்டாரத்தில் பெருகியது. மாண்புமிகு முதல்வர் இல்லத்தில் நடந்த திராவிடப் பல்கலைக்கழகத்திற்கான கூட்டத்தில் ரூ.170 கோடிகள் நிதி ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. திராவிடப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக பொறுப்பேற்கும்படி முனைவர் வ.ஐ.சுப்பிரமணியம் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால் அவர் மறுத்துவிட்டார். திருமிகு சந்திரபாபு (நாயுடு) முதல்வரானபோது தெலுங்கு கவிஞர் முனைவர் பி.வி. அருணாசலம் அவர்கள் துணைவேந்தராக நியமிக்கப்படார்.

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கான அவசரச் சட்டம் ஆந்திரப் பேரவையில் நிறைவேற்றபட்டது. அப்போதைய மாநில ஆளுநர் மேதகு கிருஷ்ணகாந்த் இச்சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக்காமல் காலம் கடத்தி வந்தார். மேதகு கிருஷ்ணகாந்த் அவர்களின் நண்பர் என்ற நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் வேண்டுகோள்படி திராவிடப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. முனைவர் வ.ஐ.சுப்பிரமணியம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராகவும் முனைவர் பி.வி அருணாசலம் துணை வேந்தராகவும் பணியமர மேதகு ஆளுநரால் ஒப்புதல் வழங்கப்பட்டது. அடுத்து வந்த ஆளுநர் மேதகு அரங்கராஜன், திராவிடப் பல்கலைக்கழகம் தொடர்பான எந்த முடிவுக்கும், எவரின் உணர்வுகளையும் பாதிக்காமல் கருத்தாக இருந்தார். ஆளுநர் அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பிராமண அலுவலர் ஒருவர் முற்போக்கான செயல் திட்டங்களை நிராகரிக்க ஆளுநரிடம் பேசி வந்ததாக முனைவர் வ.ஐ.சுப்பிர மணியம் குறிப்பிடுகிறார்.

“திராவிடப் பல்கலைக்கழக உருவாக்கத்தில் பெரும் பகுதி பணி/பெருமை திருமிகு காசிப்பாண்டியன் அவர்களையே சாரும்.” இது முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்களின் கருத்து. திருமிகு காசிப்பாண்டியன் மறைவிற்கு கண்ணீர் மல்கி தன் இனிய நண்பரை இழந்த துயரம் கொடியதெனக் குறிப்பிடுகிறார். சென்னையில் கீழ்ப்பாக்கம் கிருத்துவக் கல்லறைத் தோட்டத்தில் தன் உடலைப் புதைக்கச் செய்து உயிர் நீத்த நிலையில் சாதியைத் துறந்தார் திராவிடத் தமிழ் மாமள்ளர் திருமிகு காசிப்பாண்டியன்.

திராவிடப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு உதவியவர்களாக அட்டவணை சாதிகள்/பழங்குடிகள் ஐவரைப் பட்டியலிடுகிறார் முனைவர் வ.ஐ சுப்பிரமணியம் அவர்கள்

1) திருமிகு காசிப்பாண்டியன்.
2) ஆந்திர முதல்வரின் தனிச்செயலர்.
3) மாண்புமிகு முன்னாள் சத்தீஸ்கர் மாநில முதல்வர் அஜித் ஜோகி.
4) பல்கலைக்கழக நிதி நல்கை ஆணையக்குழுவின் செயலாளர் முனைவர் கங்குருடு (ஞிக்ஷீ. நிணீஸீரீuக்ஷீuபீu).
5) இந்திய ஆட்சிப்பணி அலுவலர் கவிஞர் முனைவர் சு.செல்லப்பா ஆகியோர்.

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு எதிராக செயல்பட்டவர்கள்

1) தில்லி மனிதவளமேம்பாட்டு அமைச்சரக பிராமணிய அலுவலர்.
2) முன்னாள் ஆந்திர மாநில ஆளுநர் மேதகு கிருஷ்ணகாந்த்.
3) ஒய்வு பெற்ற ஆந்திர பிராமண அலுவலர் ஒருவர்.

திராவிடப் பல்கலைக்கழக ஆக்கத்தில் உறவாக அட்டவணை சாதியினர், துணையாக முற்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பகையாக பார்ப்பனர்கள் இந்திய வரலாற்றுப் போக்கில் வழக்கமானதேயாகும். திருமிகு. காசிப்பாண்டியன் அவர்கள் திருவனந்தபுரத்தில் அமையப் பெற்ற அனைத்து நாடுகள் திராவிட மொழி இயல் கழகத்தின் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டவர். ஆந்திர அரசிடமிருந்து நிதி நல்கை பெற்றுத் தந்தவர். இந்த அமைப்புக்குக் கர்நாடக அரசின் முதல்வராக மாண்புமிகு தேவராசஅர்சு இருந்த போது கர்நாடக அரசின் நிதிநல்கை பெற்றுத் தந்தவர் முன்னாள் பேராயக்கட்சித் தலைவர், இந்நாள் தமிழ்த்தேயத்தின் தலைவர் திரு பழ.நெடுமாறன் என்பது ஒரு கூடுதல் செய்தி.

இந்திய அடுக்கமைவுச் சாதியச் சமுதாயத்தில் சாதிய மோதல்கள், சாதியை அடிப்படையாகக் கொண்ட சமய மோதல்கள், மக்கள் தொகைப் பெருக்கம், மிகுதியான வேளாண்மை, மிகுதியான நீர்த்தேவை, சமுதாயத் தேக்கம், பொருளாதாரத் தேக்கம் போன்ற பல சிக்கல்களை நடுவன் அரசும் ஒவ்வொரு மாநில அரசும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதை விட அரசியலாக்கும் போக்கு, போலி மக்களாட்சி முறை, ஊழல் மலிந்த தேர்தல் முறை ஆகியவற்றால் பண்பாடு குறித்த கருத்தாக்கங்கள் மக்கள் எண்ணச்சூழலில் ஏற்ற அளவு இடம் பெறமுடியவில்லை.

திராவிடப் பல்கலைக்கழகத்தின் தேவை

இந்தியாவின் பண்பாட்டுத்தளமாக இதுவரை விளங்கிய மொழி சமத்கிருதம், அம்மொழி உள்ளடக்கிய வேதங்கள், வேதாந்த கருத்துகள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியன. தேவமொழியென்று கற்பிதம் செய்யப்பட்ட சமத்கிருதத்தின் உள்ளடக்கங்கள் போற்றிப் புகழப்பட்டன. கடந்த இரு நூற்றாண்டுகளாக சமத்கிருதம் ஆழ்ந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. பல கருத்தியல்கள், கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் கட்டமைக்கப்பட்டன. “உலகின் கிழக்கு- மேற்குப் பகுதிகளின் வரலாற்றாசிரியர்கள், அகழ்வாய்வாளர்கள், புறவரைவியலார், மொழி கூறுஇயலார் ஆகியோர் காட்டிய ஆர்வத்தால், கடந்த இருநூற்றாண்டுகள் ஆழ்ந்து முழுமையாக சமத்கிருதப் பங்களிப்புகளை ஆய்வு செய்துள்ளனர். இந்தியாவின் பன்முகப் பண்பாட்டின் இணையான பங்காளியான தமிழ், 20க்கும் மேற்பட்ட திராவிட மொழிகளின் தலையூற்றாகும். இம்மொழி சமத்கிருதம் போன்று ஆய்வுகள் செய்யப் பொருத்தமான மொழியாகும்” (அர்ஜூன் சிங், 2007).

இந்தியப் பண்பாட்டின் பன்முகப்பாங்கும் சமத்கிருதமும் இந்திய சமுதாய, பொருளியல், அரசியல் அரங்குகளில் உருவாக்கிய துலக்கங்கள் ஆழ்ந்த விவாதத்திற்குரியவை. இந்தியப் பண்பாட்டின் அடிப்படைகளைக் கேள்விக் குறியாக்கிய வளநோக்காளர்களில் முதன்மையானவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். “பிராமணர்கள் ஐயம் எழுவதற்கு இடமே வைக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் நச்சுத்தனமான ஒரு கருத்தை மக்களிடையே பரப்பியிருக்கிறார்கள். வேதங்கள் பொய்யாதவை, தவறுக்கிடமற்றவை என்பதே இந்தக் கருத்து. இந்துக்களின் அறிவு வளர்ச்சி நின்றுவிட்ட தென்றால், இந்து நாகரிகமும் பண்பாடும் தேக்கமடைந்து முடைநாற்றக் குட்டை ஆகிவிட்டது என்றால் இதுதான் காரணம். இந்தியா முன்னேற வேண்டுமானால் இந்தக் கருத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்து ஒழிக்க வேண்டும். வேதங்கள் உதவாக்கரையான படைப்புகள். அவற்றைப் புனிதமானவை என்றோ பொய்யாதவை என்றோ கூறுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. பிராமணர்கள்தான் அவற்றைப் புனிதம் என்றும் பொய்யாதவை என்றும் போற்றும்படிச் செய்து வைத்திருக் கிறார்கள். ஏனென்றல் பிற்காலத்திய இடைச்செருகலான புருஷ சூக்தத்தின் மூலம் வேதங்கள் பிராமணர்களைப் பூமியின் அதிபதிகளாக ஆக்கியுள்ளன.

இனக்குழுவின் கடவுளர்களைத் துதித்து, அவர்கள் எதிரிகளை அழித்து, அவர்களின் உடைமைகளைக் கொள்ளையடித்து தங்களை வழிபடுவோருக்குக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளும் வேண்டுகோளைத் தவிர வேறெதுவும் இல்லாத இந்த உதவாக்கரை நூல்களைப் புனிதமானவை என்றும் பொய்யாதவை என்றும் ஆக்கப்பட்டது ஏன்? என்று கேட்பதற்கு யாருக்கும் தைரியம் இல்லாமல் போயிற்று. ஆனால் பிராமணர்கள் பரப்பியுள்ள இந்த விவேகமற்ற கருத்தின் பிடியில் இருந்து இந்து மனத்தை விடுவிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இந்த விடுதலை ஏற்படாமல் இந்தியாவுக்கு வருங்காலம் இல்லை. இதில் உள்ள அபாயத்தை நன்றாக அறிந்தே இந்தப்பணியை மேற்கோண்டிருக்கின்றேன். விளைவுகளுக்கு நான் அஞ்சவில்லை. மக்களைத் தட்டி எழுப்பி விடுவதில் நான் வெற்றி பெற்றால் பெரிதும் மகிழ்வேன்," என்கிறார் அண்ணல் அம்பேத்கர்(1996). வேதங்கள் பொய்யானவை; இதிகாசங்கள் பொய்க்கதைகள். இவற்றின் மீது கட்டமைக்கப்பட்ட இந்தியப் பண்பாடும் அத்தகையதேயாம்.

மொழி ஞாயிறு தேவனேயப்பாவாணர் அவர்களும் அண்ணல் அம்பேத்கரின் கருத்துகளுக்கு வளம் கூட்டியுள்ளார். "விரல் விட்டு எண்ணத்தக்க பிராமணர் தென்னாடு வந்து தாம் நிலத் தேவரென்றும், தம்மொழி தேவமொழியென்றும் சொல்லி மூவேந்தரையும் அடிமைப்படுத்தினர். ஆரியப்பூசாரிகள், அகக்கரண வளர்ச்சியின்றி சிறுபிள்ளைகள்போல் இயற்கையும் செயற்கையுமான பல்வேறு சிறுதெய்வங்களைப் பற்றி முன்னிலைப் பரவலாகவும், படர்க்கைப்பரலாகவும் பாடிய பாடற்றிரட்டே ஆரிய வேதங்களின் தொகுப்பாம். முதன் முதலாகத் தோன்றிய தொகுப்பு இருக்கு (ருக்) வேதம் ... அவ்வேதப்பிரிவுகளான பத்து மண்டலங்களுள் முதல் தொண்டுள்ளும் (ஒன்பதுள்ளும்) நாற்குலப்பகுப்பு பற்றிய குறிப்பேயில்லையென்று சொல்லப்படுகிறது. பத்தாம் மண்டலத்திலுள்ள புருடசுக்தம் என்னும் குழறுபடை மந்திரம் போலியும் பிற்காலத்து சேர்க்கப்பட்ட செருகலே" (பாவாணர்-இராசகோபால் மேற்கோள் காட்டியவாறு, 2007).

இராமலிங்க வள்ளலாரும் "வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், சைவம், வைணவம் ஆகியவற்றைக் கருத வேண்டாம்," என்று தனது இறுதிப் பேருரையில் குறிப்பிட்டார். "வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், முதலிய கலைகள் எதினிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால், அவைகள் ஒன்றிலாவது குழூஉக்குறியின்றி தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்காவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள், அணுமாத்திர மேனுந் தெரிவிக்காமல், பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள் ..... கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும்

சத்தியலோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம் வாகனம் ஆயுதம் வடிவம் ரூபம் முதலியவையும் ஒரு மனுஷனுக்கு அமைப்பதுபோல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.... இஃது உண்மை இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்கள் என்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது அப்படியே கண்ணை முடிக் கொண்டு உளறியிருக்கிறார்கள்.... சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ... நான் முதலில் சைவசமயத்தில் லட்சியம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது.... அப்படி லட்சியம் வைத்ததற்கு சாட்சி வேறே வேண்டியதில்லை; நான் சொல்லியிருக்கிற திருவருட்பாவில் அடங்கியிருக்கிற ஸ்தோத்திரங்கள் போதும்.... ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்பொழுது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது" (இராமலிங்க அடிகளார், 1873).

எண்ணிக்கையில் மக்கள் பேசாத (கணக்கெடுப்பில் சிலர் மட்டுமே பேசும்) மொழியைத் தேவமொழியென்றும், தேசிய மொழியென்றும், செம்மொழியென்றும் நிலை நாட்டப் படுவதன் தேவை: நாட்டு மக்களைச் சாதிகளாகப் பிரித்தாண்டு அவர்கள் மீது வருணாசிரம, சாதிய, அடுக்கமைவு, தேக்கச் சமுதாய நிலையைப் பேணுவதற்கு நிலவும் நிலையைத் தொடர்வதற்கே யாகும். உறவுடைய தேய இனங்களை மோத விடுவதில் நடுவன் அரசும், உச்ச அமைப்பு களும் (காவேரி நதிநீர்ச் சிக்கல் போன்று) கருத்தாகச் செயல் படுகின்றன. இந்து, ஹிந்தி, பசுமாடு, பொய்மையியல் (தொன்ம) இதிகாசங்கள் வழி உழைக்கும் மக்களை உசுப்பிவிட்டு அலைக்கழிக்கப்படுவதும் வேதப் பண்பாட்டு ஆர்வலர்களின் அன்றாட அரசியல் செயல்பாடுகள். சமத்கிருத மொழியில் படைக்கப்பட்ட "பொய்க் கதைகளைச் சமய நம்பிக்கை எனக் காரணம் காட்டி மெய்போலாக்கி" (பணிக்கர், 2007) மெய்யான பண்பாட்டுக் கூறுகளைப் பொய்யாக்கி வருகின்றனர். வெள்ளையர் ஆட்சியில் அடக்கப்பட்ட தக்கர்-பிண்டாரியர் வழி தோன்றிய குற்ற சாதியக்குழுக்கள் விடுதலைக்குப்பின்னர் பெரும் ஈகையராகக் காட்டப்பட்டு சாதிக்கோட்டையின் காவல் பணியாளர்களாக்கப்பட்டு, சமுதாய, சமய, பொருளாதார, அரசியல் அரங்குகள் குற்றமயமாக்கப்பட்டு விட்டன. நாட்டு வாழ்வில் அரசியல் பாங்கமைவு போல், பொருளியல் பாங்கமைவுபோல் பண்பாட்டுப் பாங்கமைவும் தேவை என்பதை மேதகு முன்னாள் குடியரசுத்தலைவர் உழவூர் கே.ஆர். நாராயணன் அவர்கள் எடுத்துரைத்தார்.

அரப்பா நாகரிகம் முதல், திருக்குறள், சங்க இலக்கியங்கள் ஆகியவை

இந்தியாவிற்குப் புதிய பண்பாட்டுத் தளத்தை அளிக்கவல்லவை. செம்மொழித் தமிழ், அதன் உடனுறவு திராவிட மொழிகளும், திராவிடப் பண்பாடும் சமுதாய அளவில் இந்திய வாழ்விற்கு வளம் சேர்ப்பவை. திராவிடப் பல்கலைக்கழகம், இந்தியாவில் புதிய போக்குகளைக் கொண்ட பண்பாட்டு விளைப்புக்குப் புதிய கழனி. இதற்குப் பொன்னேர் பூட்டி கழனி திருத்திய உழவர்கள் திருமிகு காசிப்பாண்டியன் மற்றும் திராவிட மொழி இயல் அறிஞர் முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் ஆகியோர். திராவிடப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தில் பங்களித்த அட்டவணைச்சாதிகள் / பழங்குடிகள் ஐவர், மற்றும் திராவிட மொழி சார்ந்த அறிவாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். மாண்புமிகு அர்ஜூன் சிங் அவர்கள் திராவிடப் பண்பாட்டை இந்திய பன்முகப் பண் பாட்டிற்குத் தளமாக்கும் பண்பாட்டு ஆர்வலர். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அஜித் ஜோகி, தனது பங்களிப்பு வழி பண்பாட்டுச் செழுமைக்கு உதவியுள்ளார். இவர் வடக்குத் திராவிட இனக்குழு சார்ந்த முற்போக்காளரும் ஆவார்.

சுருக்கம்

- திருமிகு காசிப்பாண்டியன் ஆந்திர மாநிலத்தின் ஆட்சிப்பணி அலுவலராகப் பணியாற்றியவர், அந்நாள் முதல்வரின் நண்பர், தெலுங்கு மொழி படித்தவர், திராவிடப் பண்பாட்டு ஆர்வலர்.

- திராவிடப் பல்கலைக்கழக உருவாக்கத்தில் பெரும் பங்களித்து, பண்பாட்டுத்தளத்தில் தன் வரலாற்றுக் கடமையைச் செய்தவர் திருமிகு காசிப்பாண்டியன். இவருக்கு இணையாகப் பங்களித்தவர் திராவிடமொழி இயல் **அறிஞர் முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள்.**

- ஆந்திரத்தின் மூன்று முதல் அமைச்சர்களும் நீதியரசர் அவுலு சாம்பசிவராவும் திராவிடப் பல்கலைக்கழகம் அமைய உதவியவர்கள்.

- திராவிடப் பல்கலைக்கழக உருவாக்கத்தில் அட்டவணைச் சாதிகள்/பழங்குடிகள் சார்ந்த ஐவர் ஆற்றிய நற்பங்கு வரலாற்றின் வளமான பதிவுகள்.

- திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு வந்தடைந்த பகைகள் தில்லியிலும், அய்தராபத்திலும் பிராமணிய வழியினரால் உருவாக்கப்பட்டவை.

- மாண்புமிகு அர்ஜூன்சிங் அவர்கள் இந்தியாவின் பன்முகச் சமுதாயப்

பண்பாட்டுச் சூழலில் திராவிடப் பங்களிப்பைத் தேவையாகக் கருதுவதும் தமிழைத் தளமாகக் கொள்வதும் ஒரு புதிய போக்கு.

- திராவிடப் பல்கலைக்கழகம் ஜைன மையமான குடிப்பள்ளியில் குடி அமர்ந்துள்ளது; பௌத்தமும் இப்பல்கலைக்கழகத்திற்குக் கைகொடுத்துள்ளது.

- திராவிடப் பல்கலைக்கழகம் புதிய இந்தியப் பண்பாட்டு விளைப்புக்குப் புதிய கழனி. இதில் பொன்னேர் பூட்டி கழனி திருத்திய உழவர்கள் திருமிகு காசிப்பாண்டியன் (மள்ளர்/உழுதுண்ணும் வேளாளர்) மற்றும் முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் (உழுதுவித்துண்ணும் வேளாளர்). நாட்டு வளர்ச்சிக்குப் பண்பாட்டுப் பாங்கமைவு இந்தியாவின் வரலாற்றுத் தேவை.

நோக்கீடு

1. அம்பேத்கர், பி.ஆர். (1996), முன்னுரை, பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் எழுத்தும் பேச்சும், நூல்தொகுப்பு, தோகுதி 8 (தமிழ்) பக்: 10.

2. இராசகோபால், அருணா. (2007), பாவாணர் அவர்களை மேற்கோள் காட்டியவாறு - 'மொழி, சமுதாய, சமயத்தளங்களில் பாவாணர் பங்களிப்பு', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 013. பக்:121.

3. இராமலிங்க அடிகளார். (1873), இறுதிப் பேருரை (22.10.1873), 'ஊரும் உலகும்' (ஆசிரியர் கு.வெ.கி. ஆசான்) 5(8): 1-2, 1984).

4. Arjun Singh, (2007), Speech delivered by Hounourable Minister for HRD in the Inaugural function of Central Institute on Classical Tamil at Chennai, 18.08.2007.

5. Panikkar, K.N.(2007) Myth, History and Politics. Frontline, October, 2007, p:23.

6. **Subramniam, V.I. (2007) Origin of the Dravidian University, International Journal of Dravidian Linguistics, 37(1): 191 -202 (Basis of this Tamil article).**

[பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மற்றும் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம் இணைந்து நடத்திய இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 39ஆம் பன்னாட்டு தமிழியல் கருத்தரங்கில் படிக்கப்பட்ட 'திராவிடப் பல்கலைக் கழக உருவாக்கத்தில் தமிழ் மள்ளர் திருமிகு காசிப்பாண்டியன் பங்களிப்பு' (ஆய்வுக்கோவை 2008, தொகுதி ஐந்து, பக்: 11-18) சுருக்கம் கருதி வெளியிடப்பட்ட பகுதி, இக்கட்டுரையின் ஒரு பகுதியாகும். நன்றி: பதிப்பாசிரியர்கள் முனைவர்கள் இரா.மோகன். மு.மணிவேல், சி.நாச்சிமுத்து, தூ.சேதுராம பாண்டியன், இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625021.]

(😋)(😋) @@@@@ (😋)(😋)











வ.அய்.சுப்ரமணியம்

மொழியியல் அறிஞர்










செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

केंद्रीय शास्त्रीय तमिळ संस्थान

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL - CHENNAI

ISBN 978-81-984404-9-5

